REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஜுலை 10 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வருடம் 91 இல. 161 | Monday 10, July, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## வட்டி வீதங்கள் மீண்டும் குறைக்கப்படலாம்

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை முன்னேற்றும் நோக்கில் மீண்டும் வட்டி விகிதங்கள் குறைக்கப்படலாமென மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

06

## IMF இன் 02ஆம் கட்ட கடன் தொகையை செப்டெம்பரில் பெற்றுக்கொள்ள முடியும்

### கடன் வழங்குநர்களிடமிருந்து சாதகமான பதில்



இலங்கை வெளிப்படை தன்மையுடன் செயற்பட்டு வருவதால் பிரதான கடன் வழங்குநர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது. செப்டெம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வுக்கு முன்னர் உள்நாட்டு, வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு இரண்டாம் கட்ட கடன் தொகையை பெற்றுக்கொள்ள முடியுமென, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். தேசிய மற்றும் சர்வதேச கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

06

## பொலிஸ் மாஅதிபராக மீண்டும் சி.டி. விக்கிரமரட்ண நியமனம்

### மேலும் 03 மாதங்களுக்கு ஜனாதிபதி நியமித்தார்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அரசியலமைப்பு சபையின் ஒப்புதலுடன் சி.டி. விக்கிரமரட்ண மீண்டும் மேலும் மூன்று மாதங்களுக்கு பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நியமனத்தை வழங்கினார். புதிய பொலிஸ் மாஅதிபர் நியமனம் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் மற்றும் விவாதங்கள் தொடரும் நிலையிலேயே

06

## உலக நாடுகள் பல முடங்கி கிடந்த போதும்

## இலங்கையை குறுகிய காலத்தில் மீட்க ஜனாதிபதியால் முடிந்தது



போராட்டங்களால், உலக நாடுகள் பலவும் முடங்கியிருந்த இச்சந்தர்ப்பத்தில், ஒரு வருடத்துக்குள் அந்த சவால்களை வெற்றிக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான தலைமைத்துவத்தால் முடிந்துள்ளதென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொந்த வீட்டுக்கு தீ வைத்தமை, பொதுச் சொத்துக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்ட தினமாக மே 09 ஆம் திகதி வரலாற்றில் இடம்பிடித்துள்ளதெனவும், போராட்டங்களின் பின்னால்

06

## ஜனாதிபதி மாளிகையில் இருந்து மாயமான சின்னங்கள்;

# 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டுகோள்



**எவரிடத்தில் இருப்பினும் உடனடியாக கையளிக்குமாறும் தகவல்களை 0112354354 அறிவிக்கலாமென்றும் தெரிவிப்பு**

### ஜனாதிபதியின் செயலாளர் பொதுமக்களிடம் கோரிக்கை

தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ சின்னமான (Coats of Arms) எவரிடத்திலேனும் இருப்பின், அவற்றை ஜூலை 31க்கு முன்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்வாறான கலைத்துவ மற்றும் தொல்லியல் பெறுமதிமிக்க

06

## துறைமுக நகர மேம்பால திட்டம் 2024 செப்டெம்பருக்குள் நிறைவுறும்

### அமைச்சர் பந்துல கள ஆய்வு விஜயம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

துறைமுக நுழைவு மேம்பால நிர்மாணிப்புப் பணிகள் 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திற்குள் நிறைவுபெறுமென போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் கொழும்பு துறைமுக மேம்பாலத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இம்மேம்பாலத்தின் நீளம் 5.27 கிலோமீற்றரென குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு வழிப்பாதைகளாக முன்னெடுக்கப்படும் இந்த மேம்பால வீதியின் அகலம் 25 மீற்றரென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

06

## இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்த 15 இந்திய மீனவர் கைது

### இழுவை படகுகள் கடற்படையினர் வசம்

(யாழ்.விசேட நிருபர்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன் பிடித்துக்கொண்டிருந்த 15 இந்திய மீனவர்களை, கடற்படையினர் கைது செய்துள்ளனர். இவர்களுடன் இரண்டு

06

## அநுராதபுரம் - ஓமந்தை யாழ்தேவி ரயில் 100கி.மீற்றர் வேகத்தில் பரீட்சார்த்த ஓட்டம்

### முதலாவது சேவை இம்மாதம் 15இல்

**மணிக்கு 100 கிலோ மீற்றர் அசுர வேகத்தில் ஒலி எழுப்பியவாறு வவுனியா நோக்கி பரீட்சார்த்த பயணத்தை மேற்கொண்ட யாழ்தேவி புகையிரதம்**



(வவுனியா விசேட நிருபர்)

அநுராதபுரம் ரயில் நிலையத்திலிருந்து வவுனியா ஓமந்தை ரயில் நிலையம் வரையில் நேற்றுக் (09) காலை யாழ். தேவி ரயில், மணிக்கு நூறு கிலோமீற்றர் அசுர வேகத்தில் ஒலி எழுப்பியவாறு பரீட்சார்த்தமாக பயணித்தது.

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் இந்திய நிறுவனத்தினால், மாஹோ முதல் ஓமந்தை வரையான ரயில் பாதையின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது அநுராதபுரம் – ஓமந்தை வரையிலான புனரமைப்பு பணிகள் இரண்டு கட்டமாக செயற்படுத்தப்பட்டன. வவுனியா – அநுராதபுரம் வரையிலான 48 கிலோமீற்றர் ரயில் பாதையும், வவுனியா – ஓமந்தை வரையான 13 கிலோமீற்றர் ரயில் பாதையும் புனரமைக்கப்பட்டன.

இந்த அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு

06

## அதிபர்,ஆசிரியர் பற்றாக்குறைக்கு ஒரு சில வாரங்களுக்குள் தீர்வு

### இடமாற்றங்கள் தொடர்பில் மாகாண மட்டத்தில் பேச்சு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டில் நிலவும் ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கான தட்டுப்பாட்டை இரண்டு வாரங்களுக்குள் நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்ட கல்வியமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அங்கு ஊடகங்களுக்கு கருத்துத்

06

## மஹரகம வைத்தியசாலையில் உலருணவுப் பொருட்கள் திருட்டு

### சமையற்காரர் இருவர் கைது

நோயாளிகளுக்கு உணவு தயாரிப்பதற்காக மஹரகம வைத்தியசாலையின் சமையலறை களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த உலருணவுப் பொருட்களை திருடிய இருவர் கைது செய்யப்பட்டனர்.

அதே வைத்தியசாலையில் சமையல்காரர்களாக கடமையாற்றும் பண்டாரகம மற்றும் ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 38 – 54 வயதுடையவர்களே கைதானதாக, பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு வழங்குவதற்காக கொண்டு வரப்பட்டு சேமித்து வைக்கப்படும் உலருணவுகள் கடந்த சில மாதங்களாக இவ்வாறு

06

## பெண்கள்,சிறுவருக்கு எதிராக

## வீடியோ வெளியிடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை

பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான சில விடயங்களை வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிடுபவர்களுக்கு எதிராக, கடுமையான சட்டம் அமுல்படுத்தப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

06



## 03 பூண்டுலோயாவில் பஸ் விபத்து

### 24 தோட்டத் தொழிலாளர் காயம்

## ஊழல், மோசடிகளை ஒழிப்பதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு

### இந்த சட்டத்தை எதிர்ப்போரை மக்கள் புறக்கணிப்பர்



**இலஞ்சம், ஊழல் ஆணைக்குழு முன்னாள் பணிப்பாளர் ஜெனரல் சரத் ஜயமான்ன**

முழு நாட்டினதும் எதிர்பார்ப்பாக காணப்படும் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை எதிர்ப்போரை மக்கள் புறக்கணிப்பரென இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெனரல் சரத் ஜயமான்ன தெரிவித்தார்.

அரசாங்கத் துறைக்குள் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளை தவிர்ப்பதற்காக ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ், பல்வேறு மூலோபாய திட்டங்கள் வகுக்கப்படுவதாகவும் புதிய சட்டத்தின் கீழ் இச்செயற்பாடுகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி

06

## தாதியர் சேவைக்கு புதிதாக 3,315 பயிற்சி தாதியர் இணைப்பு

### நியமனக் கடிதம் இன்று கையளிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தாதியர் சேவைக்காக மேலும் 3,315 பயிற்சித் தாதியரை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களை பயிற்சிக்காக இணைத்துக் கொள்வதற்கான நியமனக் கடிதங்கள் இன்றைய தினம் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவினால் சம்பந்தப்பட்ட பயிற்சி தாதியர்களுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

06

### 2018 ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்பட்ட

## நாசாவின் விண்கலம் 'பார்க்கர்' சூரியனுக்கு மிக அருகில் சென்றது



2018 ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்பட்ட பார்க்கர் நாசா விண்கலம், சூரியனுக்கு மிக அருகில் நெருங்கிச் சென்றதாக நாசா தெரிவித்துள்ளது. பூமியிலுள்ள சகல உயிரிகளின் ஆற்றலுக்கான ஆதாரமாக விளங்கும்

06

## திறைசேரி உண்டியல்களை ஏலத்தில் விட தீர்மானம்

### 1,60.000 மில்.ரூபா வரை ஏலம் விநியோகம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



திறைசேரி உண்டியல்களை ஏல விற்பனை ஊடாக வழங்குவதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க ஒரு இலட்சத்து 60 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களை, எதிர்வரும் 12 ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்க மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. அந்த வகையில் 91 நாட்கள் நிறைவு காலத்தை

06

## 34 போலி நாணயத்தாள்களுடன் மாணவன் உட்பட 02 பேர் கைது

மன்னார் மூதூர் சந்தியில் 34 போலி நாணயத்தாள்களுடன் பாடசாலை மாணவர் ஒருவரும் இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவனிடம் பத்து 1,000 ரூபா நாணயத்தாள்கள், ஒன்பது போலி 5000 ரூபா தாள்கள், 15 ஐந்நூறு ரூபா நாணயத்தாள்கள் காணப்பட்டதாக விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள்

06

**91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# நளீமிய்யா கலாபீடத்தில் பொன்விழா நிகழ்வுகள்











பேருவளை, ஜாமிஆ நளீமிய்யாவின் பழைய மாணவர் அமைப்பான 'றாபிததுன் நளீமிய்யீன்' ஒன்று கூடலும் ஒன்பதாவது பொதுக் கூட்டமும் கடந்த ஞாயிறு, திங்கள் (2,3.07.2023) ஆகிய இரு தினங்களாக நளீமிய்யா கலாபீட வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் விசேட அம்சமாக பல மில்லியன் செலவில் மீள் புனரமைப்பு செய்யப்பட்ட நளீமிய்யா பள்ளிவாசலை பிரதம அதிதியும் பரிபாலன சபைத்தலைவருமான யாகூத் நளீம் மற்றும் கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ அகார் முஹம்மத் இணைந்து வைபவரீதியாக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக உள்நாடு மற்றும் ஐக்கிய இராஜ்யம், கட்டார், அவுஸ்திரேலியா உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள் வருகை தந்திருந்தனர்.

றாபிதாவின் தலைவர் சட்டத்தரணி அஷ்ஷெய்க் T.ஷாகீர் தலைமையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்ட தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பேராசிரியருமான அஷ்ஷெய்க் மஸாஹிர் (நளீமி) 'நளீமிய்யா எதிர்காலத்தில் எத்தகைய இலக்குகளை அடைந்து வளர்ச்சி காண வேண்டும்' என்பதை விளக்கினார். கலாபீடத்தின் முதல்வர் அகார் முஹம்மத் 'ஜாமிஆ நளீமிய்யாவின் தற்போதைய நிலை' எனும் தலைப்பிலும், மிஷ்காத் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் உஸ்தாத் மன்சூர் 'நளீமீக்களது முன்னுரிமைகள்' எனும் தலைப்பிலும், நளீமிய்யா இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி அஷ்ஷெய்க் பளீல் அவர்கள் 'நளீமீக்களது அடைவுகளும் சாதனைகளும்' எனும் தலைப்பிலும் உரைகளை நிகழ்த்தினர். **(படங்களும் தகவலும் அஜ்வாத் பாஸி)**



ராபிதா செயலாளர் இல்ஹாம் முபாரிஸ்













# ஹஜ் ஏற்பாடுகளை சிறப்பாக செய்த சவூதி அரேபியாவுக்கு பாராட்டு



இவ்வருட ஹஜ் கிரியைகளை இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளது முஸ்லிம்களும் எவ்வித குறைபாடுகளுமின்றி வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்த சவூதி அரேபியாவுக்கு இலங்கை அல் ஹிக்மா நிறுவனம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

சுமார் இருபது இலட்சம் முஸ்லிம்கள் ஒன்றுகூடி எவ்வித குறைபாடுகளும் இன்றி ஹஜ் கிரியைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதென்பது இலகுவான காரியமல்ல. அது ஒரு பாரிய சவால். அப்படியிருந்தும் அக்கிரியைகள் வெற்றிகரமாக நிறைவடைந்திருப்பது எமக்கு பெருமை அளிக்கின்றது என்று அந்நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எச். ஷேஹுத்தீன் (மதனி) குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், 'இம்முறை மக்கா, மதீனாவில் ஹஜ் கிரியைகளை நிறைவேற்றவென இருபது இலட்சம் முஸ்லிம்கள் கூடினர். அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து ஹஜ் கிரியைகளை எவ்வித குறைபாடுகளும் இன்றி வெற்றிகரமாக நிறைவேற்றவென ஏற்பாடுகளை செய்து கொடுத்த சவூதி அரேபிய மன்னரும் இரு புனிதஸ்தலங்களின் காவலருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ், இளவரசர் முஹம்மத் பின் சல்மான் உட்பட உள்விவகார அமைச்சர் அமீர் அப்துல் அஸீஸ் பின் நாயிப் அடங்கலாக சவூதி அரேபிய உயரதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர்கள் அனைவருக்கும் இஸ்லாமிய நாடுகளது தலைவர்களும், உலமாக்களும், நலன்புரி அமைப்புகளும் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துள்ள இந்நிலையில் நாமும் அவர்களுடன் இணைந்து கொள்கிறோம்.

பெருந்தொகையான மக்களை ஒரே இடத்தில் குறிப்பிட்ட ஓரிரு தினங்களில் ஒன்று சேர்ப்பதும், அவர்களுக்கான அனைத்து அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதும், குறிப்பாக நிம்மதியாக வணக்க வழிபாடுகளில் ஈடுபட அவர்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதும், மருத்துவம் உட்பட அனைத்து உட்கட்டமைப்புகளையும் அதிநவீன முறையில் செய்து கொடுப்பதும் இலகுவான காரியமல்ல.

'ஹாஜிகளுக்கு பணிவிடை செய்வது எமக்கு மிகப்பெரும் கண்ணியம் கௌரவம்' என்று பெருமையாகக் கருதும் மனப்பான்மை சவூதி அரேபிய மன்னர்கள் அடங்கலாக அந்நாட்டு அனைத்து பிரஜைகளினதும் ஆழ் மனதில் அன்று தொட்டு இன்று வரை பதிந்துள்ள ஒன்றாகும். அந்தப் பின்புலத்தில் தான் மன்னர் உள்ளிட்ட அனைவரும் ஹாஜிகளுக்கு சேவையாற்றுவதில் பெருமிதம் கொள்வதாகவும் ஷேகுதீன் மதனி அவர்கள் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.




கொழும்பு கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி வி.சாந்தினி தலைமையில் வணிக மன்றத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்தியன் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பிரதம அதிதி, பாடசாலையின் அதிபர் பரிசில்கள் வழங்குவதை படத்தில் காணலாம்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜூலை 10 திங்கட்கிழமை

தினகரன் THINAKARAN


தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## அரசியல் இலாபம், வாக்குகளை எதிர்பார்த்து

# தொழில் சட்டத்தை கொண்டு வருவது எமது நோக்கமல்ல

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியல் இலாபம் மற்றும் தேர்தலை எதிர் பார்த்து புதிய தொழில் சட்டத்தை கொண்டு வருவது எமது நோக்கமலவென, தொழில்,வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் அவ்வப் போது கொண்டு வரப்படும் பழமை யானதும் பொருத்தமி ல்லாததுமான சட்டங்களுக்குப் பதிலாக, நாட்டையும், மக்களையும் முன்னேற் றும் தொழில் சட்டம் தொடர்பான யோசனையை முன் வைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரதமர் பதவியை பொறுப்பேற்காத எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு தமது இரு கரங்களையும் உயர்த்தி நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப் பாளர்களின் கூட்டத்தில் உரையாற் றும் போதே, அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கோட்டாபய ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச ஆகியோர் நாட்டின் ஜனாதிபதிகளாக பதவி வகித்திருக்காவிட்டால், இந்த நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் விழுந்திருக்காவிட்டால், நாட்டில் எவருக்கும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பெறுமதி தெரிந்திருக்காது.

அன்று ரணில் விக்கிரமசிங்கவை தூசித்து குற்றம் சுமத்தியவர்களும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும்,தாம் தவறிழைத்து விட்டதாக இப்போது



தெரிவிக்கின்றனர்.

நாடு இயல்பு நிலையில் காணப் பட்ட காலத்தில் எமது தலைவர் மேற்கொள்ள முயற்சித்த அனைத்து திட்டங்களின் போதும், காலை வாரி விடும் நடவடிக்கைகளையே இவர் கள் மேற்கொண்டனர்.

வரி அதிகரிப்பை மேற்கொள்ளும் போது அதனை குறைப்பதாகக் கூறி வாக்கு கேட்டனர்.

உரத்திற்கான மானியத்தை இரத்து செய்த போது உரமானியம் தருவோம் எனக் கூறி வாக்குகளைக் கேட்டனர். அவ்வாறு வாக்குகளை எதிர்பார்த்தே வாக்குறுதிகள் வழங் கப்பட்டன. அந்த வகையில் ரணில் விக்ரமசிங்கவுடனேயே சரியான பாதையில் பயணிக்க முடியும் என்பதை மக்கள் புரிந்து கொண்டுள் ளனர்.

அன்று எரிபொருள், எரிவாயு, மருந்துகளுக்காக மக்கள் வரிசையில் நின்ற போது நாம் உரத்த குரலில் கூறியது போல, சஜித் பிரேமதாச நாட்டைப் பொறுப்பேற்றிருந்தால் நாடு என்னவாகி இருக்கும்? என்பதை அனைவரும் உணர வேண்டும்.

அந்த வகையில் அவர் பிரதமர் பதவியை பொறுப்பேற்காமை தொடர்பில் நாம் இரு கைகளையும் உயர்த்தி அவருக்கு நன்றி கூறுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள் ளார்.



இந்தியாவின், புதுடில்லியைத் தளமாகக் கொண்ட இந்தியப் பெண்கள் பத்திரிகையாளர் குழுவின் தலைவி ஷோபனா ஜெய்ன் தலைமையிலான உறுப்பினர்கள், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை புதுடில்லியில் சந்தித்து கலந்துரையாடினர். இலங்கையின் படிப்படியான, நிலையான பொருளாதார மீட்சி மற்றும் இச் செயற்பாட்டுக்கு இந்தியா வழங்கிய வலுவான ஆதரவு தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டது.

# வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவை இரத்துச் செய்ய அரசாங்கம் தீர்மானம்

## பாராளுமன்றில் விசேட சட்டமூலம் விரைவில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வரி மேன் முறையீட்டு விசாரணைகள் முறையற்ற விதத்தில் இடம்பெற்று வருவதால், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென நீதி மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்த ஆணைக்குழுவை இரத்துச் செய்வதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற வேண்டியுள்ளதால் இது தொடர்பில் விரைவில் விசேட சட்டமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆணைக்குழுவின் மூலம் கடந்த இரண்டு வருடங்களில், ஒரு வழக்காவது தொடுக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், இது ஒரு பாரிய விடயமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு மேன்முறையீட்டை விசாரிப்பது தாமதமாவதால்,11,700 கோடிக்கு மதிகமான வரி நிலுவையை அறவிட முடியாமலுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத இத்தகைய ஆணைக்குழுக்களினால், எவ்வித பயனுமில்லை. இவற்றை நடத்திச் செல்வதற்கு பாரியளவு நிதி செலவிடப்பட்டுவருவதாகவும் அவ்வாறு செலவிடுவது எந்தவகையிலும் பொருத்தமானதல்ல என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் (12) புதன்கிழமை அறிவோர் ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது. சட்டத்தரணியும் விரிவுரையாளருமான கலாநிதி ஜெ.தற்பரன் தலைமையில் 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சியில் " இலங்கையின் மனித உரிமைப் பொறிமுறைகளும் அதன் வகிபாகமும்" என்னும் தலைப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கபிலன் வில்லவராஜன் (பணிப்பாளர், சர்வதேச விவகாரம், மனித உரிமைகள் ஆணைக்குழு) உரை நிகழ்த்தவுள்ளார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும்இலக்கியக் களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் மருத்துவர் தி.ஞானசேகரன் தலைமையில் எதிர்வரும் (14) வெள்ளிகிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் இலக்கியக்களம் நிகழ்ச்சியில் "சமகால புலம்பெயர் இலக்கிய அனுபவப்பகிர்வு" என்னும் தலைப்பில் எழுத்தாளர் லெ.முருகபூபதி உரை நிகழ்த்தவுள்ளார்.

# கடுவலையில் மசாஜ் நிலையங்கள் மூடப்பட்டன

கடுவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆயுர்வேத மசாஜ் நிறுவனங்கள் என்னும் பேரில் இயங்கிய விபசார நிலையங்களை மூடுவதற்கு நேற்று (09)நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடுவல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கான் வீரசிங்க இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு இயங்கிய 13 மத்திய நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், மேல் மாகாண தெற்கு பகுதி பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே. சி. ஜயமஹா, நுகேகொட பிரதேசத்திற்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி. எஸ். ஐ. பி ஏக்கநாயக்க ஆகியோரின் ஆலோசனையின் பேரில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் விகாரைகளை அண்டிய பகுதிகளில் இயங்கிய நிலையங்களை மூடவே நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடுவல பொலிஸ் மற்றும் கடுவல




மாநகர சபை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன், இந்நிலையங்களை மூடத் தீர்மானிக்கப்பட்டது.

இவற்றினது பெயர்ப் பலகைகள், பெண்களின் அரைகுறை ஆடை அணிந்த படங்கள் அது தொடர்பாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த புகைப் படங்கள் என்பனவும் அகற்றப்பட்டன .

அண்மையில் களுத்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற துரதிஷ்டமான சம்பவத்தின் பின்னரே, இவ்வாறான மத்திய நிலையங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இது, குறித்து கடுவலயை சேர்ந்த மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்களின் பாராட்டுகள் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளதாக கடுவல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# பூண்டுலோயாவில் தனியார் பஸ் 50 அடி பள்ளத்தில் விழுந்து விபத்து

## 24 தோட்டத் தொழிலாளர்கள் காயம்

**ஹற்றன் சுழற்சி தலவாக்கலை குறூப் நிருபர்கள்**



பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை – வட்டக்கொடையிலிருந்து மடக்கும்புர பகுதியை நோக்கிச் சென்ற தனியார் பஸ் வண்டி, ஐம்பது அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

தோட்டத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற இந்த தனியார் பஸ் வண்டி , கெதெனிய, கிரிடிகெட்டிய பிரதேசத்தில் நேற்று (09) மாலை 3.30 மணியளவில் வீதியை விட்டு விலகியே,இவ்விபத்து நிகழ்ந்தது.

இதில்,24 பேர் காயமடைந்ததாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் சுமார் 26 பேர் இருந்துள்ளனர்.இதில் காயமடைந்த 21 பேர் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து அதிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக 06 பேர், கம்பளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மூன்று பேர் பூண்டுலோயா மல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூண்டுலோயா வேவஹேன பிரதேசத்திலிருந்து வட்டகொட தோட்டத்துக்கு பணிபுரியச் சென்றவர்கள், பஸ்ஸில் வீடு திரும்பிய போதே விபத்து இடம்பெற்றுள்ளது.

# கற்பிட்டி வீதி விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி, பள்ளிவாசல்துறை பகுதியில் (07) இரவு இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கற்பிட்டி திகழி, ஏத்தாளையைச் சேர்ந்த சஹாப்தீன் சல்மான் (வயது 25) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளும், சிறிய ரக லொறியொன்றும் கற்பிட்டி பள்ளிவாசல் துறை கண்டல்குடா பாலத்திற்கு அருகே மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அங்கிருந்தவர்கள் குறித்த இளைஞனை சிகிச்சைக்



காக கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் அங்கிருந்து புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். எனினும், புத்தளம் தள வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்த குறித்த இளைஞன், கற்பிட்டி, குறிஞ்சிப்பிட்டியில் (07) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் ரேஸ் போட்டியை பார்வையிட்ட பின் தனது வீட்டுக்கு சென்றுகொண்டிருந்த போதே இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## புலம்பெயர் தொழிலாளர்களால்

# 06 மாதங்களில் நாட்டுக்கு 2,822.6 டொலர் வருவாய்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர் இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில் 2,822.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக சம்பந்தப்பட்ட அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில், இது 75.3% அதிகரிப்பை காட்டுவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த வருடத்தில் முதல் ஆறு மாத காலத்தில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர் 1,609.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர். இவ்வருடத்தின் கடந்த ஜூன் மாதம் வரையிலான காலத்தில், இவர்கள் மூலம் 475.7 மில்லியன் டொலர் நாட்டுக்கு கிடைத்துள்ளது. அது கடந்த வருட ஜூன் மாதத்தோடு ஒப்பிடுகையில், பாரிய அதிகரிப்பென்றும் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

# மத்தள சர்வதேச விமான நிலையம் 06 வருடத்தில் ரூ. 42,818 மில். நட்டம்

## கணக்காய்வு அறிக்கை தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துக்கு கடந்த வருடத்தில் 2,033 மில்லியன் ரூபா செயற்பாட்டு செலவினமாக அமைந்துள்ளது. இது, கிடைத்துள்ள வருமானத்தைவிட 23 மடங்கு அதிகமென்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்த அலுவலகம் புதிதாக வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கை மூலமே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு மத்தள சர்வதேச விமான நிலையம் 22, 214 மில்லியன் ரூபாவை நட்டமீட்டியது. அதில், வெளிநாட்டு அந்நிய செலாவணி முக்கியமாக அமைந்துள்ளது என்பதையும் அந்தக் கணக்காய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான ஆறு வருட காலத்தில், மத்தள சர்வதேச விமான நிலையம் 42,818 மில்லியன் ரூபாவை நட்டமீட்டியுள்ளதாகவும் அந்த கணக்காய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த தகவல்கள் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளதாக அந்த கணக்காய்வு குறிப்பிடுகிறது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு

உடலுக்கு ஒத்துவரக்கூடிய உணவைக்கூட அதிகமாகும்போது மறுத்து அளவுடன் உண்டால், உயிர் வாழ்வதற்குத் தொல்லை எதுவுமில்லை.

# நாட்டின் சுற்றுலாத்துறையை மீளக்கட்டியெழுப்ப வேண்டும்

அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக இந்நாடு கடந்த வருட (2022) ஆரம்பத்தில் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. அதற்கு 2020 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் இலங்கை உள்ளிட்ட முழு உலக நாடுகளும் எதிர்கொண்ட கொவிட் 19 பெருந்தொற்று பரவுதல் அச்சுறுத்தலும் அதன் பாதிப்புக்களும் காரணமாகின.

2022 ஆம் ஆண்டின் பிற்பகுதி முதல் பொருளாதார நெருக்கடியைக் கடந்து நம்பிக்கை அளிக்கும் வகையில் நாடு மீட்சி பெற்று வருகின்றது. இந்நிலையில் இவ்விதமான பொருளாதார நெருக்கடிக்கு இந்நாடு இனியொருபோதும் முகம்கொடுத்திடாத வகையில் நாட்டைக் கட்டியெழுப்புவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு ஏற்ப அனைத்து பொருளாதார மேம்பாட்டு திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்துவதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்கு அதிகளவில் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய துறைகளில் ஒன்றாக உல்லாசப் பயணத்துறையும் அண்மைக் காலம் முதல் இடம்பிடித்திருப்பது இதற்கான காரணமாகும்.

சுற்றுலாத்துறையானது கடன் அல்லாத நிதியை திரட்டுவதற்கான ஒரு வழியாகும். அதனால் அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது அவசியம். அந்த வகையில் இவ்வருடம் ஜனவரி முதல் ஜுன் வரையும் ஆறு இலட்சத்து 24 ஆயிரத்துக்கும் மேம்பட்ட உல்லாசப் பயணிகள் 184 நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் அதிகூடிய சுற்றுலாப் பயணிகள் இந்தியாவைச் சேர்ந்தவர்களாவர்.

இரண்டாம் இடத்தில் சோவியத் ரஷ்ய நாடுகளைச் சேர்ந்த உல்லாசப் பயணிகள் உள்ளனர். அதேநேரம் பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளில் இருந்தும் அதிக எண்ணிக்கையிலான உல்லாசப் பயணிகள் கடந்த ஆறுமாத காலப்பகுதிகளுக்குள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் மே மாதம் தவிர்ந்த ஒவ்வொரு மாதமும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருப்பதை இலங்கை சுற்றுலா அதிகார சபையின் தரவுகள் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இத்தரவுகளின்படி, இவ்வருடம் நிறைவடையும் போது இந்நாட்டிற்கு வருகை தந்த உல்லாசப் பணிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்தையும் கடந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான சாதக நிலமைகளைப் பரவலாக அவதானிக்க முடிகின்றது.

கடந்த வருடத்தின் ஏப்ரல் முதல் வீழ்ச்சியடையத் தொடங்கிய உல்லாசப் பயணத்துறை, அதேவருடம் ஒக்டோபர் முதல் மீண்டும் மீட்சி பெற ஆரம்பித்தது. அவ்வருடம் ஏப்ரல் முதல் ஓகஸ்ட் வரையும் நாட்டில் தீவிர பொருளாதார நெருக்கடி நிலவியது. அதன் தாக்கங்கங்களும் அழுத்தங்களும் உல்லாசப் பயணத்துறையின் வீழ்ச்சிக்கும் காரணமாகின.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றது முதல் அவர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் பயனாக பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் பாதிப்புக்களும் கட்டம் கட்டமாக நீங்கி மறுமலர்ச்சி பாதையில் நாடு பிரவேசித்திருக்கிறது. இந்நிலையில் உல்லாசப் பயணிகள் மத்தியிலும் புதிய நம்பிக்கைகளும் உருவாகியுள்ளன. இலங்கைக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பு இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

அந்த வகையில் சில தினங்களுக்கு முன்னர் நேபாள நாட்டின் சுற்றுலாசபை தலைமையில் அந்நாட்டின் சுற்றுலா கைத்தொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்தனர். அவர்கள் இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்துவது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இதேவேளை, இந்திய சுற்றுலாப் பயண முகவர் சம்மேளத்தின் மாநாடு கடந்த வாரம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டுள்ளது. சுமார் 500 பிரதிநிதிகள் பங்குபற்றியுள்ள இம்மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'இலங்கையைக் கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலமாக மாற்ற ஏற்கனவே திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. இத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் தனிநபர் வருமானத்தை அதிகரிக்க முடியும். அதனால் அடுத்த தசாப்தத்தில் இலங்கைக்கு பெருமளவு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் துறையாக இத்துறை மாற்றப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் சுற்றுலாத் துறையை திட்டமிட்ட அடிப்படையில் முகாமைத்துவம் செய்து கட்டியெழுப்பும் போது நிச்சயம் தனிநபர் வருமானம் அதிகரிப்பதோடு நாடு பெற்றுக்கொள்ளும் அந்நிய செலாவணியும் அதிகரிக்கவே செய்யும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும். அதனால் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிக்கும் துறைகளில் ஒன்றாக உல்லாசப் பயணத்துறையை கட்டியெழுப்புவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் நடமாடும் பேத்தாழை - பாசிக்குடா வீதியில் சிரமதானம்

கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயக்கும் பேத்தாழை பொதுநூலகம் மற்றும் விபுலானந்தர் வாசகர் வட்டம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், பேத்தாழை பொதுநூலகத்தின் முன்பகுதியில் இருந்து பாசிக்குடா கடற்கரை வரையான பிரதான வீதியின் இரு மருங்கிலும் காணப்படும் நெகிழிப் பொருட்கள் (பிளாஸ்டிக் பொருட்கள்) மற்றும் உக்காத குப்பைகளைச் சேகரிக்கும் சிரமதான நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை இன்று நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் சுற்றுலாத் தளமாக பாசிக்குடா கடற்கரை விளங்குகின்றது. இக்கடற்கரைக்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள பேத்தாழை பொதுநூலகத்தின் விபுலானந்தர் வாசகர் வட்டத்தினர் பல இலக்கிய நிகழ்வுகளை நடத்தி வருவது மாத்திரமன்றி, பல சமூகநல செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



அந்தவகையில் பேத்தாழை விபுலானந்தர் வாசகர் வட்டத்தினர் ஏனைய வாசகர் வட்டங்களுக்கு முன்னுதாரணமாக நூலகம் தொடக்கம் பாசிக்குடா கடற்கரை வரையான வீதியோரங்களில் காணப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் உக்காத கழிவுகளை அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 7.00 மணிக்கு ஆரம்பமான இச்சிரமதான நிகழ்வில் பேத்தாழை பொதுநூலக உத்தியோகத்தர்களுடன் வாசகர் வட்டத்தில் அங்கம் வகிக்கும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பொதுநல விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





ம. பிரகாஷ்
நூலகப் பொறுப்பாளர்
பேத்தாழை பொதுநூலகம்

# மாத்தளை சோமு ஐந்து நாடுகளுக்கு இலக்கியப் பயணம்

ஈழத்து முன்னணி எழுத்தாளரும், ஆய்வாளரும், நூல் வெளியீட்டாளரும், தற்போது புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வசித்து வருபவருமான மாத்தளை சோமு மொரீசியஸ், ரியூனியன், சீசெல்ஸ், மலேசியா, தமிழகம் ஆகிய நாடுகளுக்கு இலக்கியப் பயணம் மேற்கொள்கின்றார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி மொரீசியஸ் நாட்டுக்கு விஜயம் செய்யும் மாத்தளை சோமு மொரீசியஸ் மகாத்மாகாந்தி நிலையத்தில் நடைபெறும் கருத்தரங்கு மற்றும் இலக்கிய சந்திப்புகளிலும் கலந்துரையாடல்களிலும் கலந்து கொள்கிறார். மொரீசியஸ் கல்வியாளர் ஸ்டீபன் நாராயணப்பிள்ளை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து இந்திய வம்சாவளி மக்கள் மாசபையின் மொரீசியஸ் பிரமுகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுகின்றார். அதனையடுத்து ரியூனியன், சீசெல்ஸ் நாடுகளுக்குச் சென்று அங்குள்ள கலைஇலக்கிய பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடுகின்றார். இம்மாதம் 28 ஆம் திகதி மலேசிய நகரான ஈப்போவில் நாடாளுமன்ற உறுப்பினரான குலசேகரன் பிரதம அதிதியாக பங்கு பெறும் மாத்தளை சோமு எழுதிய 'வியக்க வைக்கும் பழந்தமிழர் சிந்தனைகள்' நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்து கொள்கிறார்.







ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள மாத்தளை சோமு படைப்புகள் குறித்த பல்வேறு தலைப்புகளிலான ஒரு நாள் கருத்தரங்கிலும் கலந்து கொண்டு ஏற்புரை வழங்குவார். இக்கருத்தரங்கை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வை. இராமராஜ பாண்டியன், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் உ. அலிபாபா, மதுரை காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் பா. ஆனந்தகுமார் ஆகியோர் ஒருங்கிணைக்க உள்ளார்கள். தமிழகம் மற்றும் இலங்கை, மலேசியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்தும் எழுத்தாளர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது. இக்கருத்தரங்கில் மாத்தளை சோமு எழுதிய புலம்பெயர் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சிறுகதைகள் அடங்கிய 'ஒற்றைத்தோடு' என்ற சிறுகதை தொகுப்பு, கருத்தரங்கு கட்டுரைகள் அடங்கிய நூல் என்பனவும் வெளியிடப்படவுள்ளன.

இதுவரை அவர் எழுதிய சிறுகதைகளில் தெரிவுசெய்யப்பட்ட 100 சிறுகதைகள் கொண்ட இரண்டு தொகுதிகள் பேராசான் மு.நித்தியானந்தன் முன்னுரையோடு விரைவில் வெளிவர இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எச். எச். விக்கிரமசிங்க

# இலங்கை மாணவர் கல்வி நிதியம் வடபகுதி மாணவருக்கு நிதியுதவி

**அவுஸ்திரேலியாவில் 36 வருடங்களுக்கு மேலாக இயங்கும் தொண்டர் நிறுவனம்**

அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களுக்கும் மேலாக இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவிகளைப் பெறும் வடமாகாண மாணவர்களுக்கான நிதிக் கொடுப்பனவும், தகவல் அமர்வும் அண்மையில் வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றன.

வவுனியா பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதியும், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் 01 ஆம் திகதியும் , முல்லைத்தீவில் 02 ஆம் திகதி விசுவமடுவில் திறன்விருத்தி கேட்போர் கூடத்திலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

வவுனியாவில் நீண்ட காலமாக இயங்கும் நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் (*Voluntary Organization for Vulnerable Community Development_VOVCOD*) தலைவர் த. கணேஷ் தலைமையிலும், உதவி பிரதேச செயலாளர் திருமதி பிரியதர்சினி சஜீவன் முன்னிலையிலும் வவுனியா பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடந்தது. யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இயங்கும் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் க. சுசீந்தி, மாவட்ட உதவிச்செயலாளர் திருமதி கிருஷாந்தி கமலராஜன் முன்னிலையில் யாழ். அரச அதிபர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் 01 ஆம் திகதி நடந்தது.



இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் முதலாவது தலைவரும், கணக்காய்வாளருமான ஏ.வி. முருகையா மற்றும் தற்போதைய தலைவர் லெ. முருகபூபதி மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் வீ. தனபாலசிங்கம், இ. பாரதி, ரவிவர்மா ஆகியோரும் உரையாற்றினர்.





யாழ். சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் திட்ட முகாமையாளர் சி. இன்பரூபனின் வரவேற்புரையுடனும் அலுவலர் ந. பாஸ்கரனின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மறுநாள் 02 ஆம் திகதி முல்லைத்தீவு விசுவமடு திறன் விருத்தி மண்டபத்திலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவிபெறும் மாணவர்களும் அவர்களின் தாய்மாரும் நிகழ்வில் உரையாற்றினர். கல்வி நிதியத்தின் பணிகளை சித்திரிக்கும் ஆவணப்படக்காட்சியும் இடம்பெற்றது.

வவுனியாவிலும், முல்லைத்தீவிலும் போரினால் பெரிதும் பாதிப்புற்ற மேலும் சில மாணவர்களும் இந்த நிகழ்வின்போது இந்தத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.இம்மாணவர்களுக்கான 2023 ஏப்ரல், மே. ஜுன், ஜூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களுக்கான நிதிக்கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

அவுஸ்திரேலியா – கனடா அன்பர்கள் வழங்கிய நன்கொடைகளிலிருந்து மாணவர்களுக்கும் அவர்களின் தாய்மார்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு இந்நிகழ்வுகளின்போது மதியபோசன விருந்தும் வழங்கப்பட்டது.

– லெ. முருகபூபதி
தலைவர் – இலங்கை மாணவர் கல்வி நிதியம் அவுஸ்திரேலியா

# விசுவமடுவில் சேவைநிலையத்தை திறந்து வைத்துள்ள மக்கள் வங்கி



மக்கள் வங்கி தனது புதிய சேவை மையத்தை விசுவமடு நகரில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.பண மீள்சுழற்சி இயந்திரம் (CRM) உள்ளிட்ட நவீன டிஜிட்டல் வங்கிச் சேவைகளை இச்சேவை மையம் வழங்குகிறது.

இந்நிலையம் வருடத்தில் 365 தினங்களும், நாளில் 24 மணி நேரமும் பணம் மீளப்பெறுதல், வைப்புக்கள் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவு செலுத்துதல் ஆகியவற்றுக்கு இடமளிக்கின்றது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் (மார்க்க முகாமைத்துவம்) ரி.எம்.டபிள்யூ. சந்திரகுமார, வன்னி பிராந்திய



முகாமையாளர் ஏ. ஜயசித், தர்மபுரம் மத்திய கல்லூரியின் அதிபர் திருமதி கந்தசாமி இந்தேகாந்தி, மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய உதவி பிராந்திய முகாமையாளர்கள் எஸ்.பி.சூரியகுமாரன், எஸ்.வி.ஜி.ஜே.செல்லையா, பரந்தன் கிளை முகாமையாளர் எம். ஏ.பிரான்சிஸ், விசுவமடு சேவை நிலைய முகாமையாளர் ஜி.ஜெயகணேசன் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மானுடவியல்

## சிறுத்தொண்ட நாயனார்



123

சிறுத்தொண்ட நாயனார் என்பவர் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இவர் இரண்டாம் புலிகேசியை வெற்றி கொண்ட சேனாதிபதியாக நரசிம்ம பல்லவரிடம் பணியாற்றினார் என்பதையும் குறிப்பிட வேண்டும். காவிரி வளநாட்டில் திருச்செங்கோட்டங்குடியில் மாமாத்திரர் குலத்தில் தோன்றியவர் பரஞ்சோதியார். இவர் ஆயுள் வேதக்கலையிலும், வடநூற்கலையிலும், படைக்கலத் தொழிலிலும் நிரம்பிய பயிற்சியுடையவர்; யானையேற்றம், குதிரையேற்றம், ஆகியவற்றிலும் வல்லவர். உள்ளம் நிறைந்த கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றதனால், சிவன்கழலைச் சிந்தித்துப் போற்றுதலே மெய்ந்நெறியாவதெனத் தெளிந்தவர். ஈசனடியார்க்குப் பணி செய்தலை இயல்பாகக் கொண்டவர். நரசிம்ம பல்லவரிடம் சேனாதிபதியாய்ப் போர்முனையிற் பகையரசர்களை வென்று அரசனால் நன்கு மதிக்கப்பட்டவர். இவர் மன்னர் பொருட்டு வட திசையில் படையெடுத்துச் சென்று, வாதாபி நகரத்தை அழித்து அங்கிருந்து




பலவகை நன்மணிகளையும், செல்வங்களையும், யானை, குதிரை, முதலியவற்றையும் கைப்பற்றித் தம்வேந்தனிடம் கொணர்ந்தார். அரசன் இவரது வீரத்தையும், ஆண்மையினையும் அதிசயித்து புகழ்ந்து பாராட்டினார். அந்நிலையில் பரஞ்சோதியாரை நன்குணர்ந்த அமைச்சர்கள், 'அரசே! இவரிடம் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்யும் இயல்பு நிரம்பியிருப்பதால் போரில் இவரை எதிர்க்கவல்லார் எவருமில்லை என்றனர். இச்செய்தியைக் கேள்வியுற்ற வேந்தன், "உம்பர் பிரான் அடியாரை உணராதே கெட்டொழிந்தேன், வெம்பு கொடும் போர்முனையில் விட்டிருந்தேன், என அஞ்சிப் பரஞ்சோதியாரை நோக்கி, எம்பெருமான்; எனது பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என இறைஞ்சினார்.

மன்னன் இறைஞ்சியதும் பரஞ்சோதியாரும் முன் வணங்கி 'அரசே! எனது தொழிலுக்கேற்ற பணியினைச் செய்வேன். அதற்கு என்ன தீங்கு' என்றார். அறம்புரி செங்கோலனாகிய வேந்தன், அவருக்கு நிறைந்த நிதிக்குவையும், நீடு விருத்திக்கான நல்நிலம், ஆனிரை ஆகியவற்றை அளித்து வணங்கி, 'நீர் உம்முடைய திருத்தொண்டின் நிலைமையினை நானறியாதபடி கொண்டு நடத்தினீர். இனி உம்முடைய மனக்கருத்துக்கு இசையத் திருத்தொண்டு செய்வீராக' என விடைகொடுத்தனுப்பினார்.

மன்னவனிடம் விடைபெற்ற பரஞ்சோதியார், தமது பதியாகிய திருச்செங்காட்டங்குடியினை அடைந்தார். அங்கு கணபதீச்சரத்து இறைவரை இறைஞ்சிச் சிவத்தொண்டுகளை வழுவாது செய்திருந்தார். இவர் திருவெண்காடு நங்கையை மணம் முடித்தார். நங்கையாருடன் மனையறத்தினை இனிதே நிகழ்த்தி நாள்தோறும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்துப் பின் தாம் உண்ணலை வழக்கமாகக் கொண்டிருந்தார். பரஞ்சோதியார் சிவனடியார்களை விரும்பித் தொழுது, அவர் மிகச் சிறியராகப் பணிந்து ஒழுகியமையால் 'சிறுத்தொண்டர்' என அழைக்கப்பட்டார். இவருக்கு சீராளத்தேவர் என்னும் திருமைந்தர் அவதரித்தார். (தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# வாச்சிக்குடா ஸ்ரீ ராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான கும்பாபிஷேகம்

**கிழக்கு மாகாணம் அம்பாரை மாவட்டம் அக்கரைப்பற்று வாச்சிக்குடா திருவருள்மிகு ஸ்ரீ ராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்டபக்ஷ அஷ்டபந்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆஞ்சநேயரின் திருவருளும் குருதேவர் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் பூரண ஆசீர்வாதத்துடன் ஸ்ரீஹனுமன் தாசர் ஸ்ரீ ராம்ஜி சுவாமிகளின் குரு ஆசிகளுடன் நடைபெற்றது.**



### ஆலய வரலாறு

சிவபூமி என திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட இலங்காபுரியின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிற்கு தெற்கே 65 கிலோ மீற்றர் தொலைவில் கரையோரப் பிரதேசமாக அமைந்துள்ள அக்கரைப்பற்று பண்டைய காலத்தில் கருங்கொடித்தீவு எனவும் எப்பகுதியில் இருந்து இப்பிரதேசத்தைப் பார்த்தாலும் அக்கரையில் உள்ளது போல் தென்படுகின்றமையால் அக்கரைப்பற்று என பெயர் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

இப்பூமியில் இற்றைக்கு சுமார் 26 வருடங்களுக்கு முன் இப்பகுதியில் இவ்வாலயம் தோற்றம் பெறுவதற்கான நன்னிமித்தங்கள் நிகழ்ந்துள்ளன. நல்லதம்பி கந்தசாமி எனும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த அன்பர் ஓர் தீவிர ஆஞ்சநேயா் பக்தர். இவரது கனவிலே அடிக்கடி தோன்றிய ஆஞ்சநேயர் வாச்சிக்குடாவின் எல்லைப்புறத்திலே உள்ள அவருக்கே சொந்தமான காணியில் தனக்கொரு ஆலயம் அமைக்கும் படி கேட்டுள்ளார். அதேவேளையிலே அவ்வளவினுள் அமைந்துள்ள 100 வருடங்கள் பழமை வாய்ந்த மருதமரத்தில் ஆஞ்சநேயர் வாசம் செய்வதை அவரும் அயலவர்களும் அவ்வப்போது அவதானித்தும் உள்ளனர். அதன் விளைவாக 1997ஆம் ஆண்டு அக்கிராமத்தில் உள்ள முக்கிய சில நண்பர்களோடு உரையாடி பொதுக்கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்து தனக்கு சொந்தமான வளவினையும் எழுதிக் ஆலயம் அமைப்பதற்காக ஒரு கீயுப் கருங்கல்லினையும் முதலில் பெற்றுக் கொடுத்தார். இருப்பினும் அவரது முயற்சி பல காரணங்களால் கைவிடப்பட்டது.

இந்நிலையிலேதான் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகளின் இறுதிக்காலத்தில் மலேசியாவைச் சேர்ந்த ராம்ஜி சுவாமிகளின் தொடர்பு இங்குள்ள பக்தர்களுக்கு கிடைத்தது. அதே நேரம் வாச்சிக்குடாவைச் சேர்ந்தவரும் தம்பிலுவில் தபோவனத்தை பரிபாலித்து வந்த ஜானகி அம்மா மற்றும் யாகங்களை செய்து வந்த கந்தசாமி ஐயா ஆகியோர் முருகேசு சுவாமிகளிடத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தனர். இதனால் வாச்சிக்குடாவில் ஆஞ்சநேய பக்தர்கள் கூட்டம் உருவானது. முருகேசு சுவாமி, ராம்ஜி சுவாமி ஆகியோரின் ஆசிர்வாதம் அவர்களது பக்திக்கு உரம் ஊட்டியது. ராம்ஜி சுவாமிகள் ஆஞ்சநேயரோடு பேசும் வல்லமை கொண்டவர். சுவாமிகளிடத்தில் தரிசனமான ஆஞ்சநேயர் தான் வாச்சிக்குடாவில் இருப்பதாகவும் அங்கு தனக்கு ஆலயம் அமைக்குமாறும் கூறியுள்ளார். இச்செய்தி இலங்கையிலுள்ள கந்தசாமியிடம் 2008.12.18ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது. அதேவேளை இந்தியாவில் இருந்துகொண்டே சுவாமி அவ்விடத்தை பார்வையிட்டதாகவும் அவ்வதிசயம் நிகழ்ந்ததை பலர் நேரில் கண்டதாகவும் கூறுகின்றனர். மருதமரத்தை சுற்றி ஓரிரு செக்கன்கள் நீடித்த ஒளி வட்டமே அது என்பதை பின் உணர்ந்தனர்.

அதன் பிரகாரம் 2008.12.30 ஆம் திகதி பெருந்திரளான அடியார்கள் மத்தியில் அடிக்கல் நாட்டப்பட்டது. இக்கல்நடுகையின் போது பல வருடங்களுக்கு முன் கந்தசாமியால் பெற்றுக்கொடுக்கப்பட்ட கல்லினை பயன்படுத்தியமை ஆஞ்சநேயரின் இறையருளே என கூறத்தோன்றுகின்றது. பக்தர்களின் அன்பால் ஆலய கட்டட வளர்ச்சி மிகவும் விரைவாக நடைபெற்றது. தலவிருட்சமாக அருள்வழங்கும் ஆலயத்தின் வரலாறும், சக்தியும், மகிமையும், அற்புதமும் அதிசயங்களும் நிறைந்த மருதமரம் பூஜிக்கப்படுவதுடன் 2012இல் முதல் கும்பாபிஷேகத்தையும் கண்டது.

காயத்திரி சித்தர் சுவாமிகளின் ஆசிர்வாதத்தால் இயங்குகின்ற ஆலயங்களில் எவ்வாறு நிருவாக கட்டமைப்பு இல்லையோ அது இங்கும் இல்லை. பரிபாலிப்பதற்காக மட்டும் பரிபாலன சபை ஏற்படுத்தப்பட்டது.






**வி.சுகிர்தகுமார்**
வாச்சிக்குடா விஷேட நிருபர்









களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவ தேர்த் திருவிழா படங்கள். இதன் போது சிங்கள சகோதரர்கள் வீதி உலா சென்ற முருகப்பெருமானுக்கு விஷேட பூசை வைத்து முருக பக்தர்களுக்கு தாக சாந்திக்காக குளிர் பானம் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

### முக்கியமான சில சடங்குகள்

**19712) இந்துக்கள் தங்களின் வாழ்நாளில் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான சில சடங்குகளை வரையறுத்துக் கூறும் நூல்கள்?** *தர்மநூல்கள்*

**19713) சடங்கு என்பது என்ன?** *ஒரு முக்கிய நிகழ்ச்சி எனப் பொருள்படும்.*

**19714) சடங்குகளை எவ்வாறானமுறையில் மேற்கொள்வதே சிறப்பாகும்?** *எளிமையான*

**19715) இவை எவ்வாறு அழைக்கப்படுகின்றன?** *சம்ஸ்காரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.*

**19716) இந்துக்களின் ஐந்து முக்கிய கடமைகளில் ஒன்று எது?** *'சம்ஸ்காரம்'*

**19717) 'சம்ஸ்காரம்' என்றால் என்ன?** *முறைப்படுத்துதல் அல்லது தயார்படுத்துதல் எனப் பொருள்படும்.*

**19718) புற சடங்குகள் எத்தனை?** *16*

**19719) 16 புற சடங்குகளை விவரிக்கின்ற நூல் எது?** *கிரியசூத்திர நூல்*

**19720) இந்த பதினாறு சடங்குகளும் எங்கு செய்யப்பட வேண்டியவை?** *புறத்தில்*

**19721) அகத்தில் செய்யப்பட வேண்டிய சடங்குகள் எத்தனை?** *எட்டு*

**19722) அகத்தின் எட்டு (8) சடங்குகளும் எவை?**
*1) எல்லா உயிர்களிடமும் கருணை, 2) பொறுமை, 3) பொறாமை இல்லாமை, 4) மனத்தூய்மை, 5) சாந்தம், 6) நல்ல எண்ணங்களைக் கொண்டிருத்தல், 7) தாராளகுணம், 8) பேராசை இல்லாமை*

**19723) புறத்தின் பதினாறு (16) சடங்குகளும் எவை?**
*1) திருமணம், 2) முதல் இரவு, 3) கருவுற்றல் 4) வளைக் காப்பு, 5) குழந்தை பிறந்த சடங்கு, 6) குழந்தைக்குப் பெயர் சூட்டுதல், 7) குழந்தையை முதன்முதலில் வெளியில் அழைத்துச் செல்லுதல், 8) குழந்தைக்கு முதல் சோறு ஊட்டுதல், 9) குழந்தைக்கு தலைமுடி நீக்குதல், 10) குழந்தைக்குக் காது குத்துதல், 11) கல்வி ஆரம்பம், 12) உபநயனம் 13) வேதாரம்பம், 14) கேஷாந்தம் 15) சமாவர்தனம் 16) அந்தயெஷ்டி*

**19724) திருமணம்என்பதற்குரிய வேறு சொல்?** *விவாகம்*

**19725) கர்ப்பதானம் என்பது எதனை?** *முதல் இரவை*

**19726) கருவுற்றபோது செய்யப்படுவது?** *பும்சவனம்*

**19727) வளைக்காப்பு என்பதற்குரிய வேறு சொல்?** *சீமந்தம்*

**19728) குழந்தை பிறந்த சடங்கை எவ்வாறு அழைப்பர்?** *ஜாதகர்மன்*

**19729) குழந்தைக்குப் பெயர்சூட்டுதல் என்பதற்குரிய வேறு சொல்?** *நாமகரணம்*

**19730) குழந்தையை முதன்முதலில் வெளியில் அழைத்துச் செல்லுதலை எவ்வாறு சொல்வர்?** *நிஷ்கிராமணம்*

**19731) குழந்தைக்கு முதல் சோறு ஊட்டுதலை எவ்வாறு சொல்வர்?** *அன்னபிராஷனம்*

**19732) குழந்தைக்கு தலைமுடி நீக்குதலை எவ்வாறு சொல்வர்?** *சூடாகரணம்,*

**19733) குழந்தைக்குக் காது குத்துதலை எவ்வாறு சொல்வர்?** *கர்ணவேதம்*

**19734) கல்வி ஆரம்பிப்பதை எவ்வாறு சொல்வர்?** *வித்யாரம்பம்,*

**19735) பாடசாலையில் சேர்த்தலை எவ்வாறு சொல்வர்?** *உபநயனம்*

**19736) வேதங்களைக் கற்க தொடங்குதலை எவ்வாறு சொல்வர்?** *வேதாரம்பம்*

**19737) பருவமடைந்த சடங்கை எவ்வாறு அழைப்பர்?** *கேஷாந்தம்*

**19738) பட்டம் பெறுதலை எவ்வாறு சொல்வர்?** *சமாவர்தனம்*

**19739) இறுதி சடங்கை எவ்வாறு அழைப்பர்?** *அந்தயெஷ்டி*

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 44



செல்வ செழிப்புடன் வாழ விரும்புபவர்கள், கடவுளின் கிருபையை பெற வேண்டும். அந்த கடவுளின் கிருபையை பெற, ஆதாரமாக இருப்பது ஆண்மை பொருந்திய உழைப்பு மட்டுமே. அனைத்தும் துறந்து ஆண்மையுடன் கூடிய உழைப்பை மேற்கொண்டவனுக்கு, கடவுள் அருள்வார் அல்ல அருளியே தீர வேண்டும். எனவே உழைப்பை பராமாத்மா விரும்புவார். உழைத்தவர் உயர்வார். உழைப்பது அவமானமல்ல. எவனொருவன் உழைப்பை நம்பி, திட்டமிட்டு, உறுதியுடன் செயல்படுகிறானோ, அவன் மஹான் எனப் போற்றப்படுவான். இப்படிப் பட்டவனைத் தான் இவ் உலகம் தேடுகிறது.

தகுதியுடையவனே வெகுமதி பெறுகிறான். இது ஒரு தெய்வ நெறியாகும். 'எந்த ஒரு கோட்பாடும் கடவுளால் உருவாக்கப்பட்டு அவராலே செயல் வடிவம் பெறும்' என்பதே இறைச் சட்டம். இதை கடவுளே பின்பற்றவும் செய்ய வேண்டும். அவ்வாறு அவர் பின்பற்றாமல் போனால் இந்த பிரபஞ்சம் செயல்பட முடியாது. ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு அதை அலட்சியப்படுத்துவதோ அல்லது மீறுவதோ மானமுள்ள செயலாகாது. படைப்பு என்னும் சக்கரம் கோட்பாடு என்னும் அச்சாணியின் உதவியால் தான் சுழன்று கொண்டிருக்கிறது. அந்த கோட்பாட்டை உருவாக்கிய கடவுளே அதனை மீற முடியாது. அப்படி மீறி விட்டால் அந்த கோட்பாடு அர்த்தமற்று போகும்.

உழைப்பவனை உயர்த்த வேண்டும் என்பது கடவுளின் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டின்படி உழைப்பவன் அதற்குரிய ஊதியம் பெற்றிடைவான். ஆண்மை பொருந்திய உழைப்பாளியை கைதூக்கி விடும் கட்டாயம் கடவுளுக்கு இருக்கிறது. கடவுளின் ஆதரவு உழைப்பவனுக்கு இருக்கும் பொருந்திய போது எந்த சக்தியும், அரசும் அதை தடுக்க முடியாது. ஆண்டவன் கட்டளைக்கு முன் அரச கட்டளை அடி பணியும்.

மனவலிமை இழப்பது அல்லது தாழ்வு மனப்பான்மை கொள்வது என்பது மனிதனுக்கு மனிதனே தேடிக் கொள்ளும் ஒரு சாபக் கேடாகும். சரீர பலமிருந்தும், வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் உள்ள போதும். தாழ்வு மனப்பான்மை கொண்டவன், மனவலிமை இல்லாதவன் வாழ்வில் வெற்றி பெற இயலாது. உடல் வலிமை இல்லாத போதும், மன வலிமை உள்ளவன் வெற்றி பெறுவதற்கான சாதனங்களை உருவாக்கிக் கொள்வான்.

ஏதோ சில காரணங்களினால், சில சூழ்நிலைகளில் ஒருவன் மனவலிமை இழந்து விட்டான் என்றால், அவன் அந்த சாபக்கேட்டிலிருந்து வெளிவர முடியாது என்றில்லை. முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை. சூழ்நிலை காரணமாக மனவலிமை இழந்தவன், அதிலிருந்து மெல்ல மெல் விடுபட முயற்சிக்க வேண்டும். அதற்காக அவன் தன் உடல் சக்தி முழுமையையும் ஈடுபடுத்தி தன் ஆண்மையை நிலை நாட்ட வேண்டும். தோல்வியடைந்ததும் அவநம்பிக்கை கொள்ளாமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும். நிதானமாக முயற்சிக்கும் போது மனவலிமையும், நற்தகுதிகளும் நிச்சயம் உருவாகும்.







கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி தேவஸ்தானத்தின் ஆனித்திருவிழா தேரோட்டம் (04.07.2023) நடைபெற்றபோது.... ( படங்கள் வடகொழும்பு தினகரன் நிருபர்)

# டயகம நகரில் மதுபானசாலை வேண்டாமென ஆர்ப்பாட்டம்; சிறுவர்கள் மட்டுமே பங்கேற்பு



தலவாக்கலை குறூப் நிருபர்

டயகம நகரில் புதிதாக திறக்கப்படவுள்ள மதுபானசாலையை திறக்க வேண்டாமெக்கோரியும் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் டயகம நகரைச் சேர்ந்த சிறுவர்கள் குழுவொன்று நேற்று (09) டயகம நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

டயகம நகரில் மூன்று மதுபானசாலைகள் உள்ள நிலையில், மற்றுமொரு புதிய மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த மதுபானசாலையை திறக்கக் கூடாது எனக் கோரி சிறுவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். புதிய மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து டயகம நகரில் திரண்ட சிறுவர்கள் சுவரொட்டிகளையும் பதாகைகளையும் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் கடந்த 02 நாட்களுக்கு முன்னர் டயகம நகரிலும் அதனைச் அண்மித்த தோட்டத் தொழிலாளர்களும் இந்த மதுபானசாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வட்டி வீதங்கள்...

இலங்கை மத்திய வங்கி அண்மையில் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதத்தை 02 வீதத்தால் குறைக்க தீர்மானித்துள்ளது.

அதன்படி, வழமையான வைப்புத்தொகை வீதம் 11 சதவீதமாகவும், வழக்கமான கடன் வசதி வீதம் 12 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கி தொடர்ச்சியாக கொள்கை வட்டி வீதத்தை குறைப்பது இது இரண்டாவது தடவையாகும். பணவீக்கம் மற்றும் வெளியீட்டு இடைவெளி ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்காலத்தில் மேலும் வட்டி விகிதக் குறைப்புக்கள் அவசியமாக இருக்கலாம் என்றும் கூறியுள்ளார். இதுவரை எடுக்கப்பட்ட முடிவுகள் சரியானவை என்பதையே இது காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மொத்தக் கடன் 83 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் அதில் 41.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுக் கடன் எனவும் மீதி 42.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் உள்நாட்டுக் கடன் எனவும் காட்டப்பட்டுள்ளது. வட்டி விகிதக் குறைப்பு இந்த வருடத்தின் கடைசி 06 மாதங்களில் இலங்கையை மீட்பதற்கான சாதகமான பாதையில் பிரவேசிப்பதற்கு ஏதோ ஒரு வகையில் உதவும் என நம்புவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்காலத்தில் மேலும் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான பரிந்துரைகளை இலங்கை மத்திய வங்கி முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## துறைமுக நகர....

இங்குருகடை முச்சந்தியிலிருந்து காலிமுகத்திடல் வரை செல்லும் இம்மேம்பால வீதி முழுமையாக தூண்களினால் நிர்மாணிக்கப்படும் 22 பாலங்களைக் கொண்டது. இதற்காக 360.2 அமெரிக்க டொலர்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அதில் ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் டொலரை இலகுகடனான வழங்குவதுடன், மீதமான 60.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் செலவிடவுள்ளது.

சீன சிவில் பொறியியலாளர் நிர்மாண நிறுவனத்தின் மூலம் இதற்கான நிர்மாணிப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. தற்போது மேற்படி திட்டத்தின் நிர்மாண முன்னேற்றம் தொடர்பான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையிலான அதிகாரிகள் குழு அப்பகுதிக்கு விசேட கண்காணிப்பு விஜயமொன்றை நேற்று மேற்கொண்டுள்ளது.

இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் பந்துல குணவர்த்தன, நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்பை வழங்கும் கேந்திர நிலையமாக கொழும்பு துறைமுக சுற்றாடல் அதிவேக வீதி வலையமைப்பு தொடர்புபடுத்தப்படவுள்ளது. அந்தவகையில் அதனோடு சம்பந்தப்பட்ட துறைமுக நுழைவு மேம்பாலத் திட்டம் பாரிய நிர்மாணத் திட்டமாக முன்னெடுக்கப்படுகிறது.

நாட்டில் நிலவிய கொவிட் சூழல் மற்றும் அதனையடுத்த பொருளாதார நெருக்கடி ஆகிய சவால்களுக்கு மத்தியிலும் இத்திட்டம் தடையின்றி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்காக நிர்மாணிப்பு உள்ளிட்ட நடவடிக்கை களில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊழல், மோசடிகளை....

ஊடகப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும் '101' கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் தெரிவித்ததாவது:

இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் செயற்பாடுகளை போராட்ட வடிவங்களாக மாற்றிக்கொள்ளாது அவற்றை ஒழித்துக்கட்டுவதற்கான விடயமாகவே ஊழல் ஒழிப்புக்கான புதிய சட்டம் கொண்டு வரப்படுகிறது. இதனால் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குவின் பணிகள் முழுமையாக சுயாதீன தன்மை கொண்டதாக மாறும்.

இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் காரணமாக இலங்கை மாத்திரமின்றி முழு உலகமும் நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது. ஊழல் செயற்பாடுகள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும். அதனால், தமது நாடு அபிவிருத்தி அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தலைவர்களும், மக்களும் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை மட்டுப்படுத்தி கொள்ளவே எதிர்பார்ப்பர்.

இதற்காகவே 2004 ஆம் ஆண்டில் உலக நாடுகள் இணைந்து ஊழலுக்கு எதிரான கொள்கைகளை உருவாக்கின. 2004இல், கையொப்பம் இட்டிருந்தாலும் தற்போது வரையில் உள்நுழையாமல் இருப்பது வருதத்திற்குரியதாகும். இதனாலேயே எமது நாட்டின் அரச மற்றும் தனியார் துறைகளில் மோசடி செயற்பாடுகள் நிறைந்துள்ளன. சிங்கப்பூர், ஹொங்கொங், பூட்டான், இந்தோநேசியா, மலேசியா உள்ளிட்ட ஆசிய நாடுகளைப் போன்றே ஸ்கெண்டினேவிய நாடுகளும் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை ஒழித்ததில் முன்னணியில் உள்ளன.

எமது நாட்டின் மிக முக்கியமான ஒரு அத்தியாயத்தையே இப்போது கடந்துச் செல்கிறோம். புதிய சட்டம் கொண்டுவரப்படும் பட்சத்தில் எமது அபிமானம் மேலோங்கும். இருப்பினும் சட்டம் கொண்டுவரப்படுவதால் மாத்திரம் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் முற்றாக ஒழிந்துவிடாது.

இதுவரை காலமும் ஜனாதிபதியின் தனி தீர்மானத்தின் கீழே, ஆணைக்குழுவின் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிலையில், இனிவரும் நாட்களில் சபையினால் பரிந்துரைக்கப்பட்ட ஆணையாளர் தொடர்பில் சபையுடன் ஆலோசித்த பின்பே ஜனாதிபதி தெரிவு செய்வார்.

இதனால் ஊழல் ஒழிப்பு என்ற சொற் பதத்திற்கு பொருத்தமான ஆணைக் குழுவொன்று விரைவில் உருவாகும். அதனை தடுக்க முயற்சிப்பவர்களை மக்கள் புறக்கணிப்பர்.

## மஹரகம வைத்தியசாலையில்...

திருடப்பட்டு வந்துள்ளது. இது குறித்து வைத்தியசாலை நிர்வாகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து மஹரகம பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி, மஹரகம வைத்தியசாலைக்குச் சென்ற அதிகாரிகள் குழுவொன்று, சமையலறை களஞ்சியசாலையை பரிசோதித்தது. முச்சக்கர வண்டியில் அரிசி, பருப்பு, வெங்காயம், காய்கறிகள் உள்ளிட்ட உலருணவுகள் வைத்தியசாலையிலிருந்து எடுத்துச் செல்லப்படுவதை அவதானித்தனர்.

இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்தத் திருட்டு கடந்த சில நாட்களாக இடம்பெற்று வந்தமை தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் கைது செய்யப்படவுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட சமையற்காரர்கள் இருவரும் நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டள்ளது.

## IMF இன் 02ஆம்...

ஒய்வூதிய நிதியம் மற்றும் வங்கிகளுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் 25ஆம் திகதியளவில் இணக்கப்பாட்டை எட்ட எதிர்பார்த்துள்ளோம். இதற்காக அவர்களுக்கு இரு தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் நிதி ஆலோசனைக்குழுவால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைப்புக்கு இணையாக, சர்வதேச கடன் மறுசீரமைப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் என்பன தலைமைத்துவத்தை ஏற்று வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதிய மாநாட்டின்போது பொதுக்களமொன்றை உருவாக்கின. அந்தக் களத்திலும், பரிஸ் கழக செயலகத்திலும் கடன் வழங்குநர்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை வெளிப்படை தன்மையுடன் செயற்பட்டு வருவதால் பிரதான கடன் வழங்குநர்களிடமிருந்து சாதகமான பதில்களே கிடைத்துள்ளன.

அதற்கமைய எதிர்வரும் செப்டெம்பரில் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வுக்கு முன்னர் உள்நாட்டு, வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு இரண்டாம் கட்ட கடன் தொகையை பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்புகின்றோம்.

இதற்கமைய சர்வதேச தரப்படுத்தல்களிலும் இலங்கை முன்னேற்றமடையும் வாய்ப்புக்கள் ஏற்படும். பணவீக்கத்துக்கு சமாந்தரமாக கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்படுவதன் நன்மை தற்போது மக்களை சென்றடைய ஆரம்பித்துள்ளது. இனிவரும் காலங்களில் வட்டி வீதங்கள் மேலும் குறைவடையும். அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய பொருளாதார கொள்கை காரணமாக அந்நிய செலாவணி இருப்பு 3.5 பில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது என்றார்.

## பொலிஸ் மாஅதிபராக...

இப்பதவி தொடர்பான இறுதித் தீர்மானத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை எடுத்துள்ளார். பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் பாராளுமன்றத்தில் அண்மையில் கருத்துக்களை தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, புதிய ஒருவரை நியமிப்பது தொடர்பான தீர்மானம் 48 மணித்தியாலங்களுக்குள் முன்னெடுக்கப்படுமென குறிப்பிட்டிருந்தார்.

அதே வேளை, நேற்றைய தினம் சில ஊடகங்கள் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் சிடி விக்கிரமரட்னவின் பதவியை தொடர்ந்து நீடிக்க திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தன. அத்துடன் பொலிஸ் மாஅதிபர் பதவிக்கு யார் நியமிக்கப்பட்டாலும் அவர்கள் மூன்று மாத காலத்துக்கு மட்டுமே பணியாற்றுவர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தகைய பின்னணியிலேயே பொலிஸ் மா அதிபருக்கான வெற்றிடம் 13 தினங்கள் தொடந்திருந்தது. இதன் பின்னர் நேற்று சி.டி. விக்கிரமரட்ண மீண்டும் மேலும் மூன்று மாதங்களுக்கு பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 31 ஆம் திகதிக்கு....

பொருட்கள் கடந்த 20220709 முதல் 20220714 வரையிலான தினங்களில், காணாமல் போயிருந்தன.நாட்டின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோபூர்வ சின்னமாக காணப்பட்ட (Coats of Arms) சின்னங்கள் பலவும் அவற்றுள் அடங்கும்.

ஜனாதிபதி மாளிகையை கையகப்படுத்தியிருந்த சிலர் இவற்றை எடுத்துச் சென்றிருக்கலாமென சந்தேகிக்கப்படும் நிலையிலே,இவ் வேண்டுகோளை அவர்,விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் சொத்துக்களை சட்டவிரோதமாக தம்வசம் வைத்துக்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மேற்படி சின்னம் நபரொருவரிடத்தில் அல்லது நிறுவனமொன்றிடத்தில் இருக்கும் பட்சத்தில் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

மேலும் இது பற்றிய தகவல்களை அறிந்திருப்பின் 0112354354 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக ஜனாதிபதி அலுவலகத்திற்கு தகவல் வழங்குமாறு கேட்டுகொண்ட ஜனாதிபதியின் செயலாளர், தேசிய பெறுமதிமிக்க உத்தியோகபூர்வ சின்னத்தை தேடியறிவதற்கு மக்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கும் பாராட்டு தெரிவித்தார்.

## இலங்கையை...

காணப்பட்ட நிகழ்ச்சி நிரல் என்னவென்பது தற்போது தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

'ஸ்திரமான நாட்டுக்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் (09) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே,

பணவீக்கம், வங்கி வட்டி, மின் கட்டண குறைப்பு, வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் வருகை, ஏற்றுமதி, பங்குச் சந்தை, வெளிநாட்டு கையிருப்பு வீதம் என்பவற்றில் முன்னேற்றத்தை அவதானிக்க முடிவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"அதேபோல், இதற்கான போராட்டங்களின் முக்கியமான சில நோக்கங்களையும் அவதானிக்க முடிந்தது.13 மணி நேர மின்வெட்டு, அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மக்கள் முகம்கொடுத்தனர். இருப்பினும் அரச சொத்துக்களை அழிப்பதற்கும்,வீடுகளை தீ வைப்பதற்கும், கொலைகளைச் செய்யவும் மக்களுக்கு அவசியம் இருக்கவில்லை.

மாறாக போராட்டங்களில் பங்கேற்ற மக்களுக்கு சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் நோக்கம் இருக்கவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் மேற்படி போரட்டங்களின் பின்னணியில் நின்றன. அந்த போராட்டங்கள் நிறைவுற்ற ஒரு வருட காலத்தில் நாட்டில் என்ன நடந்தது என்பது தொடர்பில் மக்களுக்கு தற்போது தெளிவாகியுள்ளது.

அதேபோல் போராட்டங்களில் பங்கெடுத்திருந்த பலருக்கு வெளிநாடுகளிலிருந்து பெருமளவான பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளமை நீதிமன்ற நடவடிக்கையின் போது தெரியவந்துள்ளது. அவற்றின் அதிகப்படியான பணம் பெருமளவில் வியாபாரம் இடம்பெறும் கோதமாலாவிலிருந்தே அனுப்பட்டிருந்தது. ஜனாதிபதி கோட்டாய காலத்தில் போதைப்பொருள் ஒழிப்புக்கான பல பணிகள் முன்னெடுக்கப்பட்டன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதனாலேயே, கோதமாலாவிலிருந்து பணம் அனுப்பட்டிருந்தது. மறுமுனையில் முன்னிலை சோசலிஸ கட்சியின் உறுப்பினர் கல்கமுவ சிறிதம்ம தேரர்கள், அவர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து பணம் வந்துள்ளதாக தெரியவந்துள்ளது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீ வைத்தவர்களுக்கு தலைமைத்துவம் வழங்கிய சஹஜ மதுசங்க என்பவரின் வங்கி கணக்குக்கும் வெளிநாடுகளிலிருந்து பணம் வந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

அதனால், போராட்டங்களுக்கு தலைமைத்துவம் வழங்கிய பலருக்கு பணம் கிடைத்த விதம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தகவல் தெரிவிப்போம். கடந்த வருடத்தில் இதேநேரத்தில் ஜனாதிபதி மாளிகையை கையகப்படுத்திக் கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்குள் காணப்பட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர்.

தற்போதை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது சொந்த வீட்டை கொழும்பு ரோயல் கல்லூரிக்கு தியாகம் செய்துள்ளார். அத்தகைய வீடும் ஜனாதிபதியின் அன்புக்கு பாத்திரமான நூலகமும் தீ வைக்கப்பட்டதும் இதுபோன்றொதொரு நாளிலாகும். அது போன்றதொரு நூலகத்தை முழு ஆசியாவிலும் தேட முடியாது. அதேபோல் தெற்கில், அமைச்சர் ரமேஷ் பத்திரன போன்ற அகிம்சாவாதிகளின் வீடுகளுக்கும் தீ மூட்டப்பட்டது.

அவ்வாறு 48 வீடுகளுக்கு தீ மூட்டப்பட்டதோடு, பெருமளவான பஸ்களும் எரிக்கப்பட்டன. இவ்வாறான அராஜகமான நிலைமைகளுக்கு முகம்கொடுத்திருந்த மத்திய கிழக்கு மற்றும் தென் ஆபிரிக்க நாடுகள் இன்றும் மீள முடியாமல் தவிக்கின்றன.

ஆனால், அவ்வாறானதொரு சூழலில் எவரும் சவாலை ஏற்றுக்கொள்ள முன்வராத போது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டார். அந்நேரத்தில் நாம் வங்குரோத்து அடைந்த நாடு. தொடர் மின்தடை, எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுப் போனது.

## கலவான - இரத்தினபுரி வீதி விபத்தில் 5 சிறுவர் காயம்

கலவான – இரத்தினபுரி வீதியில் கஹரங்கல பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்ற வாகன விபத்தில் 05 சிறுவர்கள் காயமடைந்து கலவான ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கலவான பொலிஸார் தெரிவித்தனர்.

கலவான, ஹகரங்கல பிரதேசத்தில் பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்த 05 சிறுவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர். இரத்தினபுரியிலிருந்து வந்த கார் ஒன்று வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக கலவான பொலிஸார் தெரிவித்தனர்.

## அதிபர்,ஆசிரியர்...

தெரிவிக்கையிலே, இதைத் தெரிவித்தார்.அதிபர்கள் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள நிரப்புவதற்கு திட்டமிட்டுள்ளோம். ஆசிரிய இடமாற்றம் தொடர்பிலும் மாகாண மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், ஆசிரிய இடமாற்றங்கள் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் முதலாவது பேச்சுவார்த்தை மேல் வட மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும். அதனையடுத்து ஊவா மாகாணம் உள்ளிட்ட ஏனைய மாகாணங்களிலும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கென ஒரு முழு தினத்தை ஒதுக்கி சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

மாகாண மட்டங்களில் காணப்படும் 95% பாடசாலைகள் மாகாண சபைகளின் கீழ்வரும் பாடசாலைகளே! எனவே, பேச்சுவார்த்தை மூலம் அதனை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று நாட்டில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதை நாம் அறிவோம். அந்தவகையில் 26,000 ஆசிரியர்களை நியமிக்க வேண்டியுள்ளது. அதில் தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களும் சிங்கள மொழி மூலமான ஆசிரியர்களும் உள்ளடங்குகின்றனர். நீதிமன்றத்தில் அதுதொடர்பில் வழக்கு உள்ளது. அடுத்தவாரத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவுபெற்றதும் ஆசிரியர்களை இணைப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

அதேபோன்று, ஆசிரிய இடமாற்றம் தொடர்பில் கல்வித் துறைத் தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அந்தந்த மாகாணங்களுக்கு பொருத்தமான வகையில் அதற்கான முறைமையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தாதியர் சேவைக்கு...

இதன் ஒரு அம்சமாக கொழும்பு மாவட்டத்திலுள்ள பயிற்சி மாணவர்களுக்கு முதற்கட்டமாக நியமனங்கள் வழங்கப்படும்.இதற்கு மேலதிகமாக ஏனைய பகுதி பயிற்சி தாதியர்களுக்கும் சமகாலத்தில் நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள 15 தாதியர் பயிற்சி பாடசாலைகளில், மேற்படி தாதியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

2018 மற்றும் 2019 கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கு இணங்க 3315 பயிற்சி தாதியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதே வேளை, 2019 மற்றும் 2020 கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கிணங்க பயிற்சி தாதியர்களை தெரிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல், எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## நாசாவின் விண்கலம்...

சூரியனை ஆய்வு செய்வதற்கு, நீண்ட காலமாகவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, சூரியனை மிக அருகில் சென்று ஆராயும் வகையில் 'பார்க்கர்' என்ற விண்கலத்தை கடந்த 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 12 இல், விண்ணில் ஏவியது.

சூரியனிலிருந்து வெளிவரும் வெப்ப புயலுக்கான ஆதாரம், காந்த அலை செயல்பாடுகள் உள்ளிட்டவற்றை ஆராய அனுப்பப்பட்ட இவ்விண்கலம், கடந்த ஜூன் 27 இல், 5.3 மில்லியன் மைல் தூரத்தில் சூரியனை நெருங்கிச் சென்றதாக நாசா தெரிவித்துள்ளது.

இதுவரை சூரியனை நெருங்கிச் சென்றதிலேயே மிக நெருக்கமான தூரம் இது என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அடுத்த மாதம் 21 ஆம் திகதி வீனஸ் கிரகத்தின் ஈர்ப்பு சக்தியோடு 'பார்க்கர்' விண்கலம் 4.5 மில்லியன் மைல் தூரத்தில் சூரியனை நெருங்கிச் செல்லவுள்ளது. தற்போது சூரியனின் வெப்ப அலை பகுதியை நெருங்கிய போதும் பாதிப்பின்றி செயல்பட்டு வரும் இந்த விண்கலம், அடுத்த மாதம் 4.5 மில்லியன் மைல் அருகில் சென்றும் பிரச்சினை இன்றி செயல்பட்டால், சூரியனின் ஆற்றலுக்கான ஆதாரம் மற்றும் செயல்பாடுகளை அறிய முடியுமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## திறைசேரி...

கொண்ட 70,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் நிறைவு காலத்தை கொண்ட 45,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் நிறைவு காலத்தைக் கொண்ட 45,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் இவ்வாறு ஏலத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## 34 போலி நாணயத்தாள்களுடன் ...

இருவரும் மன்னாரைச் சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த போலி நாணயத்தாள்கள் எவ்வாறு பெறப்பட்டன என்பது தொடர்பான தகவல்களை வெளிக்கொணர, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை கடற்பரப்புக்குள் ...

ஆழ்கடல் மீன் பிடிப்படகுகளும் கைப்பற்றப்பட்டதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

யாழ். நெடுந்தீவிற்கு அருகாமையில் கடற் பரப்பில் வைத்து இவர்களைக் கைது செய்ததாக தெரிவித்துள்ள கடற்படையினர், அவர்களை மேலதிக விசாரணைக்காக காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்து வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். அதேவேளை, இவ்வருடத்தின் நேற்று வரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்துள்ள 74 இந்திய மீனவர்களை, கைது செய்துள்ளதாகவும் அவர்களிடமிருந்து 12 மீன்பிடி படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற் படையினர் தெரிவிக்கின்றனர்.

## வீடியோ வெளியிடுவோர்....

நவகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் பொமிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையொன்றில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில், விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பெண்களைத் தாக்குவது மற்றும் பாலியல் துன்புறுத்தல் போன்ற வீடியோக்களை சமூக வலைத் தளங்களில் வெளியிடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்துள்ளார்.

## அநுராதபுரம் ஓமந்தை...

91.27 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இந்த அபிவிருத்தி செயற்திட்டம் நிறைவுப்பெற்றதை தொடர்ந்து மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயிலை இயக்க முடியுமென தெரிவிக்கப்பட்டது. இதன்படி பரீட்சார்த்தமாக யாழ்தேவி ரயில் 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்தது.

அநுராதபுரம் ரயில் நிலையத்திலிருந்து காலை 10.23 மணியளவில் பயணத்தை ஆரம்பித்த யாழ்தேவி, மணிக்கு 80 கிலோமீற்றர் தொடக்கம் 100 கிலோமீற்றர் வேகத்தில் ஓமந்தை நோக்கி பயணித்து, மீண்டும் ஓமந்தையிலிருந்து அநுராதபுரம் வரை அதேவேகத்தில் இந்த ரயில், பயணித்தது.

பயணத்தை ஆரம்பித்ததிலிருந்து மதவாச்சி, வவுனியா ரயில் நிலையங்களில் மாத்திரம் இது, தரித்து நின்றது. இதில் ரயில்வே திணைக்கள அதிகாரிகளும் பயணித்தனர்.

இதேவேளை, ரயில் பாதை புனரமைப்புப்பணிக்காக கடந்த ஆறு மாத காலத்துக்கு மேலாக நிறுத்தப்பட்ட காங்கேசன்துறை கொழும்புக்கான புகையிரத சேவைகள் இம்மாதம் 15 தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்க உள்ளதாக ரயில்வே திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நகர்வலம்



## இளைய சகோதரனின் தாக்குதலில் மூத்த சகோதரன் உயிரிழப்பு

### பொலன்னறுவையில் சம்பவம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பொலன்னறுவை பெலத்தியாவ பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை (5) இரவு வீடொன்றில் இளைய சகோதரனின் கத்திகுத்துத் தாக்குதலில் 25 வயதுடைய மூத்த சகோதரன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாதாரணமாக சகோதரங்களுக்குள் ஏற்படும் சண்டையாக ஆரம்பித்த பிரச்சினை நேரம் செல்லச் செல்ல இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதமாக மாறிய நிலையில் மூத்த சகோதரனை இளைய சகோதரன் கத்தியால் குத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

படுகாயமடைந்த மூத்த சகோதரன் தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இளைய சகோதரன் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளவர் என ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சந்தேக நபரை மனம்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் அனுமதியின்றி

# ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் இரு வாரங்களுக்குள் அறிக்கை தேவை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து இரண்டு வாரங்களுக்குள் தமக்கு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சின் ஆலோசனைக்குழுவின் கூட்டத்தில் வைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வாறு உள்ளூராட்சி சபைகள் மூலம் அனுமதி பெற்றுக்கொள்ளாமலே ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களினால் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளதாகவும் அவர் இதன்போதுசுட்டிக்காட்டியுள்ளார். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மூலம் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் போது, சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமானதென்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு அனுமதி பெறாமல் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தவறானதாகும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர், அது தொடர்பில் ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்;

சாதாரண நபர் ஒரு திட்டத்தைத் தொடங்கும்போது அவரால் சுமக்க முடியாத நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஒரு பாரிய அளவிலான திட்டத்தின் நிபந்தனைகள் மீறப்படும் போது சில சமயங்களில் அது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஒவ்வொரு நபரையும் தனித்துவமாக பார்க்க முடியாது. குறிப்பிடப்படும் பல திட்டங்கள் வெவ்வேறு காலங்களில் தொடங்கப்பட்டவை. எனினும் இந்த திட்டங்களை ஆராய வேண்டும். அவை தொடர்பில் கடந்த ஆலோசனைக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. நிபந்தனைகள் மீறப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பது அவசியம். அதன் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்வதும் அவசியமாகும். அதிகாரிகளின் பலவீனம் காரணமாக அரச நிறுவனங்கள் சீரழிவதை அனுமதிக்க முடியாது. எனவே அவற்றை பரிசீலித்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

## புத்தளம் மாவட்ட சர்வமத தலைவர்களுடனான சந்திப்பு



**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரிச் சங்கத்துக்கும் (PUTWA) புத்தளம் மாவட்ட சர்வமத அமைப்புக்கும் (DIRC ) இடையிலான சந்திப்பொன்று அண்மையில் புத்தளம் பெரிய பள்ளியில் நடைபெற்றது.

PUTWA வில் இந்து, கத்தோலிக்க, பௌத்த, இஸ்லாம் சமயத்தவர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

அங்கத்தவர்களின் சமயங்களில் சிறப்பான தினமொன்றை அனுஷ்டித்தல் என்ற தீர்மானத்தின் பிரகாரம் முஸ்லிம்களின் ஹஜ் பெருநாளை அனுஷ்டிக்கும் நோக்கத்துடன் இச்சந்திப்பு நடைபெற்றது.

இச்சர்வ மத வர்த்தகர் சந்திப்பில் கத்தோலிக்க மதகுரு யொஹான் தேவராஜா, ரத்தின ராஜா ரத்திணமலர், மலர் லுவிஸ் கன்னியாஸ்திரிகள், இந்து குருக்களான சிவ ஸ்ரீ பாலநாத், சிவ ஸ்ரீ சுவீகர குருக்கள், மௌலவிமார்களான அஷ்ஷெய்க் முஜீப் ஸாலிஹ், அஷ்ஷெய்க் ஷிஹான் யூசுபீ ஆகியோர் கலந்துகொண்டதுடன் நல்லுபதேசங்களையும் வழங்கினர்.

PUTWA மற்றும் DIRC நிருவாகத்தினரும் உறுப்பினர்களும் கலந்துகொண்ட இச்சந்திப்பில், PUTWA தலைவர் வை.எம். நிஸ்தாத் வரவேற்புரையை நிகழ்த்தியதோடு, அதன் கூட்டுனர் ஹிஷாம் ஹுஸைன் இச்சந்திப்பின் நோக்கத்தையும் விவரித்தார். புத்தளம் DIRC இன் ஒருங்கிணைப்பாளர் திருமதி முஷ்னியா நன்றியுரையை நிகழ்த்தினார்.



இலங்கை முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்கு ஐம்பதாண்டு நிறைவையொட்டி அதன் முன்னோடியான முன்னாள் நிதியமைச்சர் ரொனி டீ மெல்லை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின ஊடக இணைப்பாளர் சுஜித் கொடிதுவக்கு உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கொழும்பு இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

(படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## பாராளுமன்ற இலச்சினை கொண்ட விசேட முத்திரை வெளியீடு



**(வெலிகம தினகரன் நிருபர்)**

பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக பாராளுமன்ற இலச்சினை கொண்ட விசேட முத்திரை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன் முதல் நாள் தபால் உரை வெளியீட்டு வைபவம் (6) பாராளுமன்ற நூல் நிலையத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கலந்து கொண்டதோடு , அமைச்சர் பந்துல குணவர்தன , இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார , பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் ராமநாதன், பாராளுமன்ற எதிர் கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோருடன் பாராளுமன்ற செயலாளர், உதவிச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்கள் சேவை அலுவலக அதிகாரிகள் கலந்து கொண்டனர் தைபால் திணைக்கள அனுசரணையுடன் இடம் பெற்ற இந்நிகழ்வை பா ராளுமன்ற உறுப்பினர்கள் சேவை அலுவலகம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் நூலகர்களை வளப்படுத்தும் செயலமர்வு



**இறக்காமம் தினகரன் நிருபர்**

நாட்டில் உள்ள நூலக வாசகர்களுக்கு இலத்திரனியல் ஊடாக சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் நாடளாவியரீதியிலுள்ள பல்வேறு நூலகங்களிலும் தமிழ் மொழி மூலம் சேவையாற்றி வருகின்ற நூலகர்கள் மற்றும் நூலக பொறுப்பாளர்களை வளப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக இலங்கை தேசிய நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நாள் பயிற்சி பட்டறை கடந்த வியாழக்கிழமை (06) முழுநாள் அமர்வாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் தலைவர் பேராசிரியர் நந்த தர்மரத்ன, பணிப்பாளர் நாயகம் டப்ளியு சுனில் ஆகியோரினால் இதன் ஆரம்ப நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நூலகர் ரவீந்திர குமார் வளவாளராக கலந்து கொண்டார்.

மென்பொருள் அடிப்படையில் பட்டியலாக்கம் தொடர்பான மேற்படி பயிற்சிப்பட்டறையில் நாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் மற்றும் இதர நூலகங்களில் சேவையாற்றி வரும் சுமார் 130 நூலகர்கள் மற்றும் நூலக பொறுப்பாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.



பேருவளை சீனன்கோட்டை பிரதேச இளம் மாணிக்க வியாபாரிகளால் புதிதாக சமூக சேவைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள "சீனன்கோட்டை முத்துக்கள்" வட்ஸப் குழுமத்தின் முதலாவது கலந்துரையாடல் நிகழ்வு நேற்று (09) குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாஸிம் தலைமையில் அம்பேபிட்டிய காவிந்த விழா உல்லாச விடுதியில் முழு நாள் நிகழ்வாக நடைபெற்றது. இந்நிகழ்வில் குழுமத்தின் எதிர்கால திட்டங்கள், முன்னெடுக்கப்படவுள்ள சேவைகள் தொடர்பாக உறுப்பினர்கள் கலந்துரையாடினர்.


### அறிவித்தல்

**லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவிற்கான கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை — 2024**

2024 ஜனவரி 01ம் திகதி தொடக்கம் 2024 டிசம்பர் 31ம் திகதி வரையுள்ள காலப்பகுதியின் கீழ் லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான அனுமதி பத்திரம் வழங்குவதற்கான கேள்வி பத்திரங்கள் என்னால் கோரப்படுகின்றன.

02. 2338 இலக்கத்தையுடைய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானி பத்திரிகையில் 2023.06.23 திகதி பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கேள்வி பத்திரங்கள் 2023.08.11ம் தகிதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாக அனுப்புதல் வேண்டும். மேலும் அன்றைய தினம் திருப்திகரமான கொள்வனவாளர் முன்வராவிடின் கேள்வி பத்திரம் மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அதற்கான விண்ணப்பங்கள் 2023.09.08ம் திகதி மு.ப. 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**டி.எம்.என். திசாநாயக்க,**
**பிரதேச செயலாளர்,**
**லுணுகலை.**

**2023.07.05ம் திகதி**
**பிரதேச செயலகம் லுணுகலை**

### நெல் தொகையை ஏல விற்பனை செய்தல்

ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் ஒக்கம்பிட்டிய அரச விதைப் பண்ணையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல் 26,824.5 கி.கிராம் மற்றும் பிபிலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல் 2,104 கி.கிராம் விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களை ஊவா மாகாண விவசாய திணைக்களம் - 055-2222318, ஒக்கம்பிட்டிய அரச விதை பண்ணை - 055-2272317 பிபிலை மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் - 055-2265423 அல்லது www.up.gov.lk இணையதளத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**இறுதித் திகதி :- 2023.08.02**

**பெறுகைக் குழுத் தலைவர்,**
**ஊவா மாகாண விவசாயத் திணைக்களம்,**
**ரத்வத்த மாவத்த,**
**பதுளை.**






அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் உபதலைவர்களில் ஒருவரான எம்.ஐ.உதுமாலெப்பை, கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.இதற்கான கடிதத்தை அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசிய தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் வழங்கிவைத்தார்.பேரவையின் தலைமைக் காரியாலயத்தில் தலைவர்,இஹ்சான் ஏ.ஹமீட் தலைமையில் (08) நடைபெற்ற 2023/ 2024 நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் இந்நியமனம் வழங்கப்பட்டது. பேரவையின் நிரந்தர அங்கத்தவ உறுப்பினர்கள் மற்றும் விசேட அங்கத்துவ உறுப்பினர்களுக்கு உப குழுக்களின் தவிசாளர்களுக்கான நியமனங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

(படங்கள் : ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.07.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5169 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,507,432.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 4 4 4 4 0 0

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1517 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,379,736.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 25 — வெற்றி இலக்கங்கள் 25 26 28 52
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3411 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,651,938.00
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 26 47 76 79

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1199 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,736,027.20
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 26 49 69 71 — விசேட எழுத்து G

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 478 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,928,377.00
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 04 06 22 30 — விசேட இலக்கினம் துலாம்

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.07.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5168 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,259,164.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 3 0 5 3 2 0

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1516 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,252,148.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 03 41 59 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3410 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,445,630.40
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 04 45 48 78

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1198 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,498,079.20
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 20 21 50 69 — விசேட எழுத்து Q

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 477 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,792,180.60
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 04 08 30 41 — விசேட இலக்கினம் கும்பம்

# கிழக்கின் குரல்



# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம்

## பொதுநலத் திட்டங்கள் பல அங்குரார்ப்பணம்

**கல்முனை விசேட,சாய்ந்தமருது விசேட நிருபர்கள்**





பாகிஸ்தானின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாறுக் புர்கி சனிக்கிழமை (08) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மற்றும் அட்டாளைச்சேனை உள்ளிட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்து, பல்வேறு பொது நலத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

வை.எம்.எம்.ஏ. பேரவையின் அழைப்பின் பேரில், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

சுத்தமான குடிநீரை வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் நிதி ஒதுக்கீட்டில் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட குழாய்க் கிணறுகள் மற்றும் பொதுக் கிணறுகள் இதன்போது பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரால் திறந்து வைக்கப்பட்டன.

அத்துடன் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களையும் அவர்களின் வாழ்விடங்களையும் பார்வையிட்ட உயர்ஸ்தானிகர், அவர்களது தேவைப்பாடுகளை கேட்டறிந்து கொண்டதுடன், மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகப் பைகள், மென்பந்து கிரிக்கெட் துடுப்பு மட்டைகள், கால் பந்துகள் என்பவற்றையும் வழங்கி வைத்தார். அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டு உரையாடினார். சுமார் 80 வருட வரலாற்றைக் கொண்ட இப் பாடசாலைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மேற்கொள்ளவிருப்பதாகவும் உறுதியளித்தார். இந்நிகழ்வில் ரஹ்மத் பவுண்டேஷன் சார்பில் நினைவுச் சின்னம் ஒன்றும் உயர்ஸ்தானிகருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், உயர்ஸ்தானிகர் ரஹ்மத் பவுண்டேஷனுக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி கௌரவித்தார்.



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் சர்வதேச விவகாரங்களுக்கான இணைப்பு செயலாளராக ஏ.எல்.எம்.லாபீர் சனிக்கிழமை (8) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை வெளிவிவகார செயலகத்தில் 25 வருடம் சேவையாற்றியுள்ளதோடு தாய்லாந்து, கனடா, சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் இராஜதந்திரியாகவும் செயற்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்ட போது.

படம்; கந்தளாய் தினகரன், அட்டாளைச்சேனை குறூப் நிருபர்கள்

# திருக்கோவிலில் கடலரிப்பை தடுக்க பாரிய கற்கள் இடும் பணி ஆரம்பம்



**திருக்கோவில் தினகரன் நிருபர்**

திருக்கோவில் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தினை கடலரிப்பில் இருந்து பாதுகாக்கும் வகையில், கடலோர பாதுகாப்பு திணைக்களத்தினால் பாரிய கற்கள் இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திருக்கோவில் பிரதேசத்திற்கு வருகை தந்த கடலோரப் பாதுகாப்பு திணைக்கள பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாசன் மற்றும் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் ஆகியோர் கற்கள் இடும் பணிகளை பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து திருக்கோவில் பொது மயானம் மற்றும் அம்பாரை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனம் அமைந்துள்ள பகுதிகளையும் பார்வையிட்டதுடன், அப் பகுதிகளுக்கும் கற்கள் இடுவதற்கான உத்தேச திட்டவரைவு ஒன்றினை தயாரிப்பது தொடர்பாகவும் ஆராய்ந்து இருந்தனர்

இப் பிரதேசத்தில் தொடர்ந்தும் கடலரிப்பு பாரிய சேதங்களை ஏற்படுத்தி வந்த நிலையில், வரலாற்று தொன்மை கொண்ட திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தினை பாதுகாக்கும் வகையில் கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தினால் 8.5 மில்லியன் செலவில் கற்கள் இடும் பணிகள் இடம்பெற்று வருவதுடன், இம்மாத இறுதிக்குள் கற்கள் இடும் பணிகள் நிறைவடைய உள்ளதாக கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

# களப்பில் மிதந்த நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

**வாச்சிக்குடா விஷேட, அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில், பனங்காட்டு பாலத்திற்கு அண்மையில் உள்ள களப்பில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் சனிக்கிழமை (08) மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் அக்கரைப்பற்று கோளாவில் 02ஐ சேர்ந்த 43 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான இராமலிங்கம் சிவகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

களப்பில் உள்ள ஆழமான பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே, களப்பின் சேற்றில் புதைந்து இவர் இறந்திருக்கலாம் என உறவினர்களால் சந்தேகிக்கப்படுகின்றது.

மீன்பிடிக்கச் சென்றவர் மாலை வரை வீட்டிற்கு திரும்பாத நிலையில், அவரின் மனைவி உறவினர்களிடம் விசாரித்துள்ளார். அங்கும் அவர் செல்லவில்லை என தெரிந்து கொண்ட நிலையில், சனிக்கிழமை காலை களப்பில் சடலமொன்று மிதப்பதாக அறிந்து கொண்டு பார்வையிட்டபோதே இறந்தவர் தனது கணவர் என அடையாளம் காணப்பட்டார்.

இறந்தவரின் ஒரு கையில் அவர் கொண்டு சென்ற சிறிய பை காணப்படுவதுடன், அருகில் அவரது மோட்டார் சைக்கிளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

# உரமானியம் வழங்குவதற்கான பண உறுதிச்சீட்டு விநியோகம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் 2023ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற் செய்கைக்கான அரசு உரமானியம் வழங்குவதற்கான பண உறுதிச்சீட்டு விநியோகிக்கப்பட்டு வருதாக, அம்பாறை மாவட்ட சிரேஸ்ட கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.ஏ. ஹார்லிக் தெரிவித்தார்.

ஒரு ஹெக்டெயருக்கு 08 ஆயிரம் ரூபா பெறுமதியான பண உறுதிச்சீட்டு விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

விவசாயிகள் தத்தமது பிரதேசத்துக்குட்பட்ட கமநல சேவை மத்திய நிலையங்களில் அரசு உரமானியம் வழங்குவதற்கான பண உறுதிச்சீட்டினை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தார்.

விவசாயிகள் தங்களுக்கு கமநல சேவை மத்திய நிலையத்தினூடாக வழங்கப்பட்டுள்ள அரசு உரமானியம் வழங்குவதற்கான பண உறுதிச்சீட்டினை, அங்கீகரிக்கப்பட்ட உரிய உர பிரதிநிதிகளிடம் அல்லது கமநல சேவை மத்திய நிலையங்களில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அரை ஹெக்டெயருக்கு உட்பட்ட சிறு நெல் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் இலவசமாக ரீ.எஸ்.பி. உரம் மற்றும் யூரியா உரம் என்பன வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை சிறு போகத்தில் அம்பாறை மாவட்டத்தில் 01 இலட்சத்தி 35 ஆயிரம் ஏக்கரில் நெற் செய்கை பண்ணப்பட்டுள்ளது.



வரலாற்றுச் சிறப்பு மிக்க துறைநீலாவணை முத்துமாரியம்மன் ஆலய திருச்சடங்கின் தீமிதிப்பு வைபவம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றபோது, அடியார்கள் தீமிதிப்பில் கலந்துகொள்வதனைப் படத்தில் காணலாம். படம்: மணல்சேனை நிருபர்

# நீர் விநியோகத்தை சீராக்குமாறு மகஜர் கையளிப்பு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயத்திற்குட்பட்ட, அட்டாளைச்சேனை பிரதேசத்திற்கு வரும் நீர்வழங்கலானது, எந்தவித முன்னறிவித்தலும் இல்லாமல் அண்மைக்காலமாக அதிக நேரம் நீர் விநியோகம் தடைப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் இப் பிரச்சினை சம்பந்தமாக அண்மையில் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஏ.சீ. நியாஸால் நீர்வழங்கல் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம்.முஸாஜிதை அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயத்தில் சந்தித்து இப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுத் தர வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை பிராந்திய முகாமையாளர் அவர்களிடம் அவர் ஒப்படைத்தார்.



முதியோர் தேசிய செயலகத்தினால் மூதூர் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட லெமினேட்டிங் சாதனம், மாவட்ட முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தரால் மூதூர் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளரிடம் வெள்ளிக்கிழமை (7) மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. படம்: தோப்பூர் தினகரன் நிருபர்

# யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விவேகானந்தபுர பிரதேசத்தில், சனிக்கிழமை (08) யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுரவணையடியூற்று திக்கோடை பிரதேசத்தைச் சேர்ந்த (59) வயதுடைய நாகமணி நாராயணபிள்ளை என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். வழக்கம் போல் தனது வீட்டிலிருந்து அருகில் உள்ள ஆலயத்திற்கு சென்றவர் வீடு திரும்பாத நிலையில், மறுநாள் உறவினர் ஒருவர் குறித்த வீதியூடாக தனது கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு சென்று கொண்டிருக்கும் போது, குறித்த நபர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில், காணப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.



மூதூர் கொட்டியாரக்குடா கடற்கரையை அண்டிய தக்வாநகர் துறைமுக பகுதியில், அமைக்கப்பட்டுள்ள மீனவர் விடுதிக் கட்டடம் கடலரிப்பினால் பெரிதும் சேதமடைந்து வருவதை காணலாம். (படம்; மூதூர் தினகரன் நிருபர்)

# பாதணிகள் வழங்கி வைப்பு



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

பாத்தி மீரா பவுண்டேசனின் ஏற்பாட்டில், வாழைச்சேனை அறபா நகர் முகைதீன் அப்துல் காதர் வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு, ஆசிரியர் ஏ.எல். அப்துல் மஜீத் தலைமையில் அறபா ஜூம்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதில் மர்ஹூம் மீராசாஹிப் குடும்ப உறவினர்கள், ஓய்வுபெற்ற அதிபர்களான சுபைதீன், அஹமட், நெய்னா முகம்மட் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஸ்ரப், அறபா ஜூம்ஆப் பள்ளிவாசல் செயலாளர், நிருவாக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு அறபா நகர் முகைதீன் அப்துல் காதர் வித்தியாலயாலயத்தில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வறிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள்



வாழைச்சேனை அன்நூர் தேசிய பாடசாலையில் 2008 ம் ஆண்டு சாதாரண தர பழைய மாணவர் சங்கத்தினர், வறிய மாணவர்களை இனம்கண்டு அவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பல சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் அதிகஷ்ட பிரதேசமான ஜெயந்தியாயா அஹமட் ஹிராஸ் வித்தியாலயத்தில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான, கல்வி உபகரணங்கள் வழங்கும் வைபவம் வெள்ளிக்கிழமை (07) அஹமட் ஹிராஸ் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் ஜெயினுல் ஆப்தீனின் வேண்டுகோலுக்கு இணங்க , 2008ஆம் ஆண்டு சாதாரண தர, பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தவர்களின் நிதியுதவியுடன் 2008 பழைய மாணவர் சங்க உறுப்பினர்களினால் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களிடம் தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் என்பன கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அதிபர் ஆசியர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.




## சொல்லுக்கு செயல் வடிவம் கொடுப்பதே எனது அரசியல் 'ஸ்டைல்',

# மலையக பல்கலைக்கழகம் நிச்சயம் மலரும்

### அமைச்சர் ஜீவன்



சொல்லுக்கு செயல் வடிவம் கொடுப்பதே எனது எங்களது அரசியல் 'ஸ்டைல்', எனவே, மலையக பல்கலைக்கழகம் நிச்சயம் மலரும். இதில் மாற்று கருத்துக்கு இடமில்லை என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பல்கலைக்கழக விவகாரத்தை வைத்து அரசியல் நடத்தாமல், அந்த மகத்தான பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மலையகத்திற்கான தனி பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான இறுதிக்கட்ட வேலைத்திட்டங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அழைப்பின் பேரில் கொட்டகலைக்கு வருகை தந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் நடைபெற்றது.

கொட்டகலை ஆசிரியர் கலாசாலையை கேந்திரமாக கொண்டு பல்லைக்கழகத்தின் முதற்கட்ட தொகுதியினை நிறுவுவதற்கும், மேலும் நிர்வாக ரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு செல்வதற்குமான இறுதிக்கட்ட கலந்துரையாடலாக இது அமையப்பெற்றது.

மேலும், பல்லைக்கழகத்தில் எந்தவிதமான பாடவிதானங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மிக விரைவில் இலங்கை அரசு மற்றும் சர்வதேச ரீதியிலான உதவியுடன் இங்கு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தோடு, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க கல்வி அமைச்சர், பத்தனை ஸ்ரீபாத கல்வியல் கல்லூரிக்கும் விஜயமொன்றை மேற்கொண்டார்.

கல்லூரியின் பீடாதிபதி மற்றும் மாணவர்களுடன் அமைச்சர் ஜீவன் தொண்டமானும், கல்வி அமைச்சரும் கலந்துரையாடினார்கள். கல்வி நடவடிக்கைகள் தொடர்பிலும், எதிர்கால திட்டங்கள் பற்றியும் கேட்டறிந்துக் கொண்டார்கள்.

இதன்போது கல்லூரிக்கு தேவையான விடயங்கள் தொடர்பில் எம்மிடம் மாணவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதியளித்தார். அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கும் உடனடி பணிப்புரையை வழங்கினார்.

இந்த சந்திப்புகளின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,

பல்கலைக்கழகத்துக்கான அனுமதி பல்கலைக்கழக ஆணைக்குழுவிடம் இருந்து ஏற்கனவே பெறப்பட்டிருந்தது. கொரோனா, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் பணிகள் ஸ்தம்பித்தன. இது தொடர்பில் அமைச்சரவையில் ஜனாதிபதியிடம் பேசினேன். கல்வி அமைச்சரிடமும் கலந்துரையாடினேன். இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இருவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

## நுவரெலியா நகரில் கத்திக்குத்து

# ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி



**ஆ.ரமேஸ்**

நுவரெலியா பிரதான வீதி கடைப்பகுதியில் நபர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி இரத்த வெள்ளத்துடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா குற்றத்தடுப்பு பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்கானவர் நுவரெலியா பம்பரகலையில் வசிக்கும் ஹரிதாஸ் (வயது 33) என விசாரணையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நகரின் பிரதான வீதி பகுதியின் நடைப்பாதை ஓரத்தில் பழங்கள் வியாபாரம் செய்து வரும் நபர் ஒருவருக்கும் கத்தி குத்துக்கு உள்ளான நபருக்கும் இடையில் வாய் தர்க்கம் ஏற்பட்டுள்ள நிலையில் அதிக ஆத்திரத்தில் வியாபாரி அந்நபரை கத்தியால் குத்திவிட்டு உடனே நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்கு சென்று நடந்ததை கூறிவிட்டு சரணடைந்துள்ளார்.

அதேவேளை சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அங்கு இரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடி கொண்டிருந்த நபரை குத்தப்பட்ட கத்தியுடன் நுவரெலியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

மேலும் கத்தி குத்துக்கு இலக்கான நபர் தினமும் மது அருந்திவிட்டு நகரில் கடைகளுக்கு சென்று கப்பம் கேட்பதையும் மிரட்டுவதையும் தொழிலாக கொண்டுள்ளவர் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா குற்றத்தடுப்பு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

அம்புலுவாவ 3 கட்டையில் கார் விபத்து:

## ஏழு பேர் ஹெம்மாதகம வைத்தியசாலையில் அனுமதி



**கம்பளை நிருபர்**

கம்பளை ஹெம்மாதகம பிரதான வீதியின் அம்புலுவாவ 3 கட்டை பகுதியில் கார் ஒன்று வீதியை விட்டு பள்ளத்தில் விழுந்ததில் இரண்டு குழந்தைகள் உட்பட ஐவர் காயமடைந்து ஹெம்மாதகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹெம்மாதகம பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான காரில் மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு சிறு பிள்ளைகள் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளை உலப்பனை பிரதேசத்தை சேர்ந்த இவர்கள் கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த வேளையில் நேற்று முன்தினம் மதியம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சுமார் 100 அடி செங்குத்தான சரிவில் கார் வீழ்ந்துள்ளது, ஆனால் யாருக்கும் பாரியளவில் காயம் ஏற்படவில்லை என போலிஸார் தெரிவித்தனர். இந்த கார் விபத்துக்குள்ளான போது ஹெம்மாதகம பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் சுமனசேகர அந்த வீதியில் கம்பளை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

# தெரணியகலை டிப்போவுக்கு புதிய பஸ் வண்டிகள் வழங்கல்

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**



தெரணியகலை தேர்தல் தொகுதியில் சேவையில் அமர்த்தப்படுதவதற்கென இலங்கை போக்குவரத்து அதிகார சபையின் மூலம் தெரனியகலை டிப்போவுக்கு புதிய பஸ் வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி பஸ் வண்டிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு (7) சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

தெரணியகலை தேர்தல் தொகுதியில் ஹிந்குரன, தலாவ. கிரிஹேன, மடவல, உட மாலிபொட, பேருவில்ல ஆகிய பகுதிகளுக்கு மேற்படி புதிய பஸ் வண்டிகள் சேவையில் அமர்த்தப்பட உள்ளன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்களான துஷ்மந்த மித்ரபால, சுதத் மஞ்சுல, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய உட்பட அரச அதிகாரிகளும் கலந்த கொண்டனர்.

# மாகாஸ்தோட்டம் கீழ்ப் பிரிவு ஆலயம் உடைக்கப்பட்டு திருட்டு

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுவரெலியா மாகாஸ் தோட்டம் கீழ் பிரிவு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயம் சனிக்கிழமை (08) இரவு உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்தின் பிரதான நுழைவாயில் கதவின் பூட்டை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த திருடர்கள் ஆலய வெளிமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியலை உடைத்து பணத்தைத் திருடியுள்ளனர். திருடப்பட்ட உண்டியலை ஆலயமுற்றத்திலேயே விட்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில் வழக்கம் போல் ஞாயிற்றுக்கிழமை காலை கோவிலில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்காக வந்த அக்கோவில் பூசகர் பிரதான கதவுப் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.



ஸ்தலத்துக்கு விரைந்த நுவரெலியா பொலிஸார் மோப்ப நாய்களுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் விரல் அடையாளயங்களையும் எடுத்துக் கொண்டனர்.

இதேவேளை, இதற்கு முன்னரும் இந்த ஆலயத்தில் சுவாமி சிலையில் அணிவிக்கப்பட்டிருந்த தாலி மணி, தங்க ஆபரணங்கள், ஆலய ஒலிபெறுக்கி உபகரணங்கள் மற்றும் ஆலய உண்டியலை காணிக்கை பணம் என்பன திருட்டு போயிருந்தமை தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் இருப்பினும் அது தொடர்பில் பொலிஸார் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனவும் ஆலய நிர்வாகத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனினும் சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்த நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பலாங்கொடை விஜினத்கும்புர மக்கள் குடிநீரின்றி அவதி

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை விஜினத்கும்புர பிரதேசத்தில் உள்ள தோட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீர் வசதியின்மையால் 20 குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக தாம் குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுப்பதாகவும் கிணறு ஒன்றியிலிருந்து பல வருடகாலமாக குடிநீர் பெற்று வந்த போதிலும் அந்த கிணறும் பாவிக்க முடியாதுள்ளதாக தோட்ட மக்கள் தெரிவித்தனர்.

நாளாந்த சம்பளத்திற்கு தோட்டத்தில் பணி புரியும் நாம் கிணற்றை புனரமைத்துக் கொள்ள வசதியற்றவராக இருப்பதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர்.தற்காலிகமாக குடிநீரை பெற்றுக்கொள்ளவாவது கிணற்றை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இறக்குவானை சின்னபாராவத்தை யுவதி காதலனால் கொடுமைப்படுத்தப்பட்டுள்ளார்

## கிருஷ்ணன் பிரதீபா எழுதிய கடிதத்தில் வெளிவந்த உண்மைகள்

இறக்குவானை ஹோட்டலில் மர்மமான முறையில் மரணமான யுவதியின் இருப்பிடமான சின்னபாராவத்த ஸ்டபிடன் பகுயில் அமைந்துள்ள வீட்டின் அறையொன்றிலிருந்து யுவதியால் எழுதப்பட்ட 9 பக்கங்களை கொண்ட கடிதம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த (04) பனாவளையில் உள்ள ஹோட்டல்அறையொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்த இருபத்தி இரண்டு வயதுடைய இறக்குவானை சின்னபாராவத்த ஸ்டபிடன் வசிக்கும் கிருஷ்ணன் பிரதீபா கடந்த மாதம் (16) இந்தக் கடிதத்தை அவர் எழுதியுள்ளார்.

ஆங்கிலத்தில் தமிழ் விளக்கத்துடன் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,..

தனக்கு முன்பு அழகான காதல் உறவு இருந்ததாகவும், ஆனால் அது முறிந்துபோனதாகவும். அதன் பிறகு, தனது முதல் காதலனிடம் தான் காட்டிய அன்பு நிரோசனிடம் இருந்ததாக நினைத்து, தனது தற்போதைய காதலரான நிரோசனைக் காதலித்தார். ஆனால் நிரோசனும் தன்னை காதலிக்கவில்லை என்றும், பல்வேறு சமயங்களில் மிரட்டி பணம், தங்கம், சொத்து என அனைத்தையும் அபகரித்ததாகவும் எழுதி வைத்துள்ளார். அவ்வாறு பணம் கொடுக்காத போது நிரோசன் தன்னை கடுமையாக தாக்கியதாக கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நிரோசன் என்னை காதலிக்கவில்லை. அடிக்கடி என்னிடம் பணம் வாங்குகிறான். கொடுக்க பணம் இல்லாத போது என்னிடம் உள்ள தங்க நகைகளை அடகு வைத்து நிரோசனிடம் கொடுத்தேன். கொடுக்க முடியாத போது என்னை கடுமையான வார்த்தைகளால் திட்டுவான். பணம் கொடுக்கப்பட்ட நாட்களில் மட்டுமே அவன் மகிழ்ச்சியாக இருப்பான். அவன் விரும்புவதை மட்டுமே நான் செய்ய வேண்டும்.என் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், சகோதர சகோதரிகள் யாரும் என்னை நிரோசன் அளவுக்கு அடித்ததில்லை. என்னை கட்டி வைத்தும் அடித்திருக்கான். நிரோசனை திருமணம் செய்து கொண்டால் ஒன்று அவனை விவாகரத்து செய்து விடுவேன். இல்லையேல் தற்கொலை செய்து கொள்வேன் என யுவதி கடிதத்தில் எழுதியுள்ளார்.

உயிரிழந்த பிரதீபாவின் கடிதத்தை கண்டுபிடித்த அவரது தந்தை ராமையா கிருஷ்ணன் கூறுகையில்,

எனது இளைய மகளின் சாவுக்கு அவளை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்ற வாலிபர் தான் காரணம். அவனால் தான் என் மகளுக்கு இப்படி நடந்தது. மகள் அணிந்திருந்த நகையை ஒரு இலட்சம் ரூபாய்க்கு அடகு வைத்து அந்த இளைஞனிடம் கொடுத்த ரசீதும் கிடைத்துள்ளது. என் மகள் வீட்டில் இருக்கும் போது மிகவும் சோகமாக இருந்தாள். அந்தச் சமயத்துல அதைத் தெரிஞ்சுக்க என் மனைவியோடு கூட நான் சண்டை போடுவேன். எனது மகளிடம் இருந்த பணம் மற்றும் தங்கம் அனைத்தையும் அந்த இளைஞன் எடுத்துச் சென்றுள்ளான். அதுதொடர்பில் எங்களுக்கு எதுவும் தெரியாது. எனது மகளின் மரணத்திற்கு அந்த இளைஞன் தான் காரணம் என்பதால் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார். இது தொடர்பாக யுவதியின் தாய் மகளின் இந்த உறவு குறித்து எங்களுக்குத் தெரியாது என்று திருமதி பாலையா நாகேஸ்வரி தெரிவித்தார். அந்த இளைஞனால் என் மகளுக்கு நிறைய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில், இறக்குவானை பொலிஸ் குற்றப்பிரிவு நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பி.வி.விக்ரமபாலவிடம் கேட்டபோது, உயிரிழந்த சிறுமி எழுதியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்றினை



அவரது தந்தை பொலிஸாரிடம் கையளித்துள்ளார். இருப்பினும், கடிதத்தில் அவரது தற்கொலை பற்றிய தகவல்கள் உள்ளன. யுவதியின் மரணம் தொடர்பில் எதிர்வரும் (19) நீதிமன்ற விசாரணை நடைபெறும் என்றார்.

உயிரிழந்த யுவதியின் பிரேத பரிசோதனையில் சடலத்திலிருந்து எடுக்கப்பட்ட உடல் உறுப்புகள் மரண விசாரணை அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட உள்ளது. அத்தோடு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட உயிரிழந்த யுவதியின் காதலரான 23 வயதான முச்சக்கர வண்டி சாரதி மற்றும் விடுதி பொறிப்பாளர் ஆகியோர் விடுவிக்கப்பட்டனர்.

**இறக்குவானை இந்திக்க சி குமார**

# தெரணியகலையில் புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியசாலை கட்டடத்தொகுதிகள் திறப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**



தெரணியாகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரவில் புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியசாலை கட்டடத்தொகுதிகள் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்கவினால் (7) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இதற்கமைய தெரணியகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஹிங்குரலகந்த கிராமிய வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடத்தொகுதி, பொந்தெனிகந்த ஆரம்ப சுகாதார வைத்திய பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் வெளி நோயாளர் பிரிவு என்பன சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்கவினால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் நிதியுதவியின் கீழ் ஹிங்குரலகந்த கிராமிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் நிதியுதவியின் கீழ் 320 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலை 1952 ஆம் ஆண்டு டி.எஸ்.சேனாநாயக்கவின் அரசாங்கத்தின் கீழ் மகளிர் பிரிவுக்காக ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

பொந்தெனிகந்த ஆரம்ப சுகாதார வைத்திய பிரிவு மற்றும் அவசர சிகிச்சை பிரிவு என்பவும் ஆசிய அபிவிருத்தி கடன் நிதியுதவியின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க (7) தெரணியகலை மாலிபொட சுகாதார பராமரிப்பு நிலையத்திற்கும் திடீர் விஜயம் செய்து அதன் குறைபாடுகளையும் கேட்டறிந்தார்.

# வடக்கின் உதயம்

# முல்லைத்தீவு மாவட்ட செயலாளராக உமாமகேஸ்வரன் கடமை பொறுப்பேற்பு





**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிய மாவட்ட செயலாளர் பதவி வெற்றிடத்துக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய அ. உமாமகேஸ்வரன் நியமிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் (9) காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த அ.உமாமகேஸ்வரன் கடந்த வாரம் அமைச்சரவையினால் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக அங்கீகாரம் பெற்ற நிலையில் நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் காரியாலயத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டதை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த அரச அதிபருக்கு பொன்னாடைகள் போர்த்தி மாலை அணிவித்து அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து உரிய சுப நேரத்திலே அரசாங்க அதிபர் தன்னுடைய கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

## போலியான சாரதி அனுமதிப் பத்திரம் தயாரித்த இருவர் யாழ்ப்பாணத்தில் கைது

**யாழ்.விசேட நிருபர்**

வெளிநாட்டிற்கு செல்வோருக்கு போலியான சாரதி அனுமதிப் பத்திரம் தயாரித்து கொடுத்த குற்றச்சாட்டில், யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நபர் ஒருவர் வைத்திருந்த சாரதி அனுமதிப் பத்திரம் போலியானது என பொலிஸாரினால் கண்டறியப்பட்டு அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

போலி அனுமதிப் பத்திரம் வைத்திருந்த நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்து, அவரிடம் பெற்ற வாக்கு மூலத்தில், சமூக வலைத்தளம் ஒன்றின் ஊடாகவே போலி சாரதி அனுமதி பத்திரம் வழங்கியவர்களின் தொடர்பு ஏற்பட்டது எனவும் , சாரதி அனுமதி பத்திரத்தை பெறுவதற்கு 50 ஆயிரம் ரூபாய் அறவிட்டார்கள் எனவும், தனது வீட்டிற்கு வாகனம் ஒன்றில் வந்து கைரேகைகளையும், பிற ஆவணங்களையும் பெற்று சென்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். குறித்த நபர்களின் போலி சாரதி அனுமதிப் பத்திரம் தயாரிப்பதற்காக வைத்திருந்த உபகரணங்கள் என்பவற்றை கைப்பற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், குறித்த நபர்களிடம் போலியான சாரதி அனுமதி பத்திரங்களை பெற்றவர்கள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்னர்.

## கிணற்றிலிருந்து வெடிக்காத மோட்டார் ஷெல்கள் மீட்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி தச்சன்தோப்பு பகுதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றில் இருந்து சனிக்கிழமை மதியம் வெடிக்காத நிலையில் 24 மோட்டார் ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாவனையில் இல்லாத நிலையில் காணப்பட்ட கிணற்றினை வீட்டு உரிமையாளர் சுத்தப்படுத்திய போது மேற்படி இரும்பு பெட்டி அவதானிக்கப்பட்ட நிலையில் உடனடியாக இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தி ஷெல் பெட்டி கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இராணுவத்தினரால் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சாவகச்சேரி விபத்தில் முதியவர் உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் விபத்தில் சிக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை சேர்ந்த பத்மநாதன் கதிர்வேல் (வயது 66) என்பவரே உயிரிழந்தவராவார்.

முதியவர், யாழ்ப்பாணத்தில் இருந்து, வெள்ளிக்கிழமை மீசாலையில் உள்ள தனது உறவினர் வீட்டிற்கு பேருந்தில் சென்று, இறங்கி யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலையை கடக்க முயன்ற போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. அதனால் தூக்கி வீசப்பட்ட முதியவர் படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். விபத்தினை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் ஓட்டி சம்பவ இடத்தில் இருந்து தப்பி சென்ற நிலையில், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## லண்டனிலிருந்து வந்த சிறுவன் மருதங்கேணி கடலுக்குப் பலி

**யாழ்.விசேட நிருபர்**

லண்டனில் இருந்து, யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினரின் மரண சடங்குக்கு வந்த சிறுவன் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கடலில் நீராடிக்கொண்டிருந்த வேளை, கடலில் மூழ்கிய சிறுவனை அங்கிருந்தவர்கள் மீட்டு , மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சிறுவன் மாற்றப்பட்ட நிலையில், அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனுக்கு 06 வயது, லண்டனில் இருந்து தனது பெற்றோருடன் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினரின் மரண சடங்கில் கலந்து கொள்ள வந்திருந்த நிலையிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பிளாஸ்டிக்கால் விலங்குகளுக்கு பாதிப்பு; வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி

**ஓமந்தை விஷேட நிருபர்**




இந்து, பௌத்த சங்கத்தினரின் ஏற்பாட்டில் நேற்று நடைபவனி பேரணி ஒன்று வவுனியாவில் நடைபெற்றுள்ளது.

இந்து, பௌத்த சங்கத்தினரின் ஏற்பாட்டில் பொலித்தீன் பாவனையை தடைசெய்வோம் எனும் தொனிப்பொருளில் குறித்த நடைபவனி பேரணியானது நடைபெற்றுள்ளது. பொலித்தீன் பாவனையால் ஏற்படும் தீமைகள் மற்றும் விலங்குகளுக்கு ஏற்படும் தீமைகள் போன்றவற்றை மக்களுக்கு தெளிவூட்டும் விதமாக நடைபவனி அமைந்திருந்தது.

| கேகாலை மாவட்டம் | | | |
| 1 | MF1316 | கொலொன்ன | 191.71 |
| 2 | MF0293 | களனி | 167.58 |
| 3 | MF1266 | கெந்தலந்த | 160.19 |
| 4 | MF1579 | தெரணியகல தே சக்தி | 150.85 |
| 5 | MF1580 | கித்துல்கல | 148.92 |
| 6 | MF0085 | நூரி | 147.98 |
| 7 | MF1528 | மிசா | 147.29 |
| 8 | MF0236 | பம்பேகம | 145.73 |
| 9 | MF1297 | இலுக்தென்ன | 144.25 |
| 10 | MF0353 | யட்டிதேரிய | 143.52 |
| 11 | MF0626 | ஹல்கொல்ல | 143.27 |
| 12 | MF0472 | எடேரபொல | 131.62 |
| 13 | MF1546 | இரம்புக்கன்ன | 128.17 |
| 14 | MF0903 | மலிபொட | 127.06 |
| 15 | MF0267 | நிவ் மவுன்ட் கர்மல் | 122.31 |
| 16 | MF1599 | கெனோரா | 119.39 |
| 17 | MF1304 | கெஹெல்வல | 117.15 |
| 18 | MF0895 | தோத்தல் ஓய | 115.51 |
| மாத்தளை மாவட்டம் | | | |
| 1 | MF0722 | ஹாத்தளை | 121.14 |
| 2 | MF1413 | மவுன்ட் எலீசா | 118.64 |
| 3 | MF0344 | மாத்தளை வெஸ்ட் | 118.26 |
| 4 | MF0370 | பண்டாரபொல | 105.31 |
| 5 | MF0724 | மிட்லேண்ட்ஸ் | 99.64 |
| மாத்தறை மாவட்டம் | | | |
| 1 | BF0157 | ஆபர் வெலி | 204.01 |
| 2 | BF0138 | போத்தொட்டுவ | 198.74 |
| 3 | MF1410 | குணவர்தன | 194.94 |
| 4 | MF1337 | லும்பிணி | 188.07 |
| 5 | MF1507 | சன்ரைஸ் | 182.92 |
| 6 | MF1468 | நில்ரிச் | 180.61 |
| 7 | MF1331 | தம்பஹல | 180.11 |
| 8 | MF0437 | கந்தேதொல | 180.01 |
| 9 | MF1547 | மாகந்துர | 179.88 |
| 10 | MF1407 | போகொட | 179.21 |
| 11 | MF1502 | நில்கிரி | 179.20 |
| 12 | MF0443 | கிங்ஸ்புரு | 179.03 |
| 13 | MF1041 | கலபொட | 179.03 |
| 14 | MF1274 | பெருபேவுல | 178.93 |
| 15 | MF1450 | ரொட்டும்ப | 178.58 |
| 16 | MF0440 | ஊறுவல | 178.52 |
| 17 | MF0216 | இரசா | 178.06 |
| 18 | MF1415 | சியேன்ட்டா | 177.57 |
| 19 | MF1275 | தெனியாய நிவ் | 176.25 |
| 20 | MF1428 | ∴போசூன் | 174.53 |
| 21 | MF1024 | எல்லன்வெலி | 174.10 |
| 22 | MF1443 | சீ டீ ஹில்ஸ் | 173.95 |
| 23 | MF1518 | கோ-ப் கோலா | 173.91 |
| 24 | MF1574 | பலகல | 173.91 |
| 25 | MF1287 | நந்தன | 173.78 |
| 26 | MF1498 | ஊருபொக்க | 173.76 |
| 27 | MF1329 | முலட்டியன | 173.58 |
| 28 | MF1433 | கொஸ்கஹதொல எல்ல | 172.73 |
| 29 | MF1320 | ரிச்லன்ட் | 172.01 |
| 30 | BF0173 | டெவோனியா | 171.98 |
| 31 | BF0044 | மொரவாகொரல | 171.50 |
| 32 | MF1462 | லயன்ஸ் | 171.43 |
| 33 | MF1506 | வலவ்வத்த | 170.96 |
| 34 | MF1270 | பியோல்ட்டா | 170.00 |
| 35 | MF0454 | கலகாவ | 168.70 |
| 36 | MF0802 | தெனியாய | 168.66 |
| 37 | MF1231 | எட்டம்பகஹவில | 168.07 |
| 38 | MF1578 | லக்வின்கா | 167.76 |
| 39 | MF1322 | பஸ்கொட | 166.83 |
| 40 | BF0188 | கஜுபோவிட்டியான | 166.82 |
| 41 | MF1500 | கிரீன் ஹவுஸ் | 166.29 |
| 42 | BF0161 | ∴பேரிலன்ட் | 166.22 |
| 43 | MF1360 | டிசான்வெலி | 165.32 |
| 44 | MF1406 | கிரின் லங்கா | 164.12 |
| 45 | MF1490 | இரன்சேகொட | 163.68 |
| 46 | MF1423 | கோ- ஓப்- லங்கா | 162.38 |
| 47 | MF1004 | தித்தெனிபொத்த | 162.06 |
| 48 | MF1577 | லேனம ஹில்ஸ் | 161.97 |
| 49 | MF1077 | மஹேந்திரா | 161.94 |
| 50 | MF1198 | தெனியாய தே சக்தி | 161.50 |
| 51 | MF0414 | கட்டன்வில | 161.45 |
| 52 | MF1464 | ∴பேரிமவுன்ட் | 161.21 |
| 53 | MF1561 | தெடியகல | 160.65 |
| 54 | MF1107 | திப்பொல | 159.46 |
| 55 | MF1402 | நிவ் சவுத் கோ-ஓப் | 158.34 |
| 56 | MF1514 | நிவ் அதுரலிய | 158.34 |
| 57 | MF1412 | லக்கீ டெய்ஸ் | 157.98 |
| 58 | MF1486 | தம்மென்ன | 157.50 |
| 59 | MF1339 | யோல்டா | 157.24 |
| 60 | BF0186 | நில்வலா | 157.15 |
| 61 | MF1278 | மத்தொட்ட | 156.88 |
| 62 | MF1545 | லியோன்ட்டா | 156.76 |
| 63 | MF0426 | சவுத் கோ-ப் | 156.65 |
| 64 | MF0977 | விலி குரூப் | 156.44 |
| 65 | MF1414 | தெரங்கல ஹில்ஸ் | 153.73 |
| 66 | MF1542 | அன்டாரதெனிய | 151.96 |
| 67 | MF0064 | அனின்கந்த | 151.84 |
| 68 | MF0975 | செமிடெல் | 149.04 |
| 69 | MF1340 | த்ரி டைம்ஸ் | 149.04 |
| 70 | MF1539 | எஸ்.எல்.எஸ் | 147.70 |
| 71 | BF0024 | நிவ் கிரிமெட்டிதெனிய | 147.03 |
| 72 | MF1033 | நில்திய வெளி | 146.54 |
| 73 | MF1482 | தெரங்கல | 146.10 |
| 74 | MF1417 | கோப்வீன் | 145.46 |
| 75 | MF0009 | எனசல்வத்தை | 143.13 |
| 76 | MF1484 | குடாபான | 141.58 |
| 77 | MF1516 | கன்ரிச் | 139.80 |
| 78 | MF1383 | நவ தியகல | 135.90 |
| 79 | MF0016 | பெவேர்லே | 134.01 |
| 80 | MF1349 | ருஹனுபுத்தா | 131.23 |
| 81 | MF1362 | நிவ் காமிணி | 128.87 |
| 82 | MF1568 | வுட்லென்ட் | 128.17 |
| 83 | MF1533 | தலபலாகந்த | 118.90 |
| நுவரெலிய மாவட்டம் | | | |
| 1 | MF0545 | அக்ராகந்த | 202.73 |
| 2 | MF0226 | கிலாஸ்கோ | 188.02 |
| 3 | MF0489 | கிரேட் வெஸ்டர்ன் | 152.04 |
| 4 | MF1301 | நுவரெலியா | 151.01 |
| 5 | MF0071 | வத்தேகொட | 147.61 |
| 6 | MF0004 | மட்டகெலே | 147.16 |
| 7 | MF0642 | புரோட்லேன்ட்ஸ் | 146.10 |
| 8 | MF0348 | நோர்வூட் | 144.89 |
| 9 | MF0779 | சமர்செட் | 141.71 |
| 10 | MF0769 | எல்டன் | 140.46 |
| 11 | MF0350 | சோகம | 138.86 |
| 12 | MF0647 | உட ரதெல்ல | 137.96 |
| 13 | MF0396 | இன்ஜெஸ்ட்ரி | 135.07 |
| 14 | MF0294 | ரொப்கில் குரூப் | 134.97 |
| 15 | MF0548 | கெனில்வர்த் | 134.40 |
| 16 | MF0008 | கொரக்ஓய | 134.00 |
| 17 | MF0981 | என்பீல்ட் | 133.89 |
| 18 | MF0711 | பெயார்வெல் | 133.70 |
| 19 | MF0569 | டெஸ்போர்ட் | 133.38 |
| 20 | MF0772 | ஹோலிரூட் | 133.13 |
| 21 | MF0066 | கௌரவில | 132.86 |
| 22 | MF0159 | ஸ்டோக்ஹோம | 132.41 |
| 23 | MF0457 | பெட்ரோ | 132.30 |
| 24 | MF0221 | தலவாகெலே | 131.97 |
| 25 | MF0541 | போகாஹவத்த | 131.68 |
| 26 | MF0767 | டிலரி | 131.65 |
| 27 | MF0618 | யுலிபீல்ட | 131.16 |
| 28 | MF0835 | ஹரங்கல்ல | 130.20 |
| 29 | MF0926 | கிரேக் லீ | 129.44 |
| 30 | MF0502 | கிலேன்டில்ட் எஸ்டேட் | 129.40 |
| 31 | MF0584 | ∴பெயார்லவன் | 129.02 |
| 32 | MF0495 | ∴புரொடைய்ஸ் | 128.27 |
| 33 | MF0689 | லக்ஷபான | 126.35 |
| 34 | MF0005 | ஸ்டோனி க்ளிப் குரூப் | 125.91 |
| 35 | MF0368 | பெல்மோரல் | 125.83 |
| 36 | MF0459 | கோர்ட் லொஜ் | 124.86 |
| 37 | MF0366 | அக்ரா ஊவா | 124.78 |
| 38 | MF0399 | மொரே | 124.70 |
| 39 | MF0308 | ∴பெட்ரெசோ | 124.68 |
| 40 | MF0069 | கொட்டியாகல்ல | 124.62 |
| 41 | MF0656 | லோவர் டொன்சயிட் | 124.18 |
| 42 | MF0595 | டிக்கோயா | 123.58 |
| 43 | MF0345 | நோர்த் மெதகும்புர | 123.44 |
| 44 | MF0204 | லேதன்டி | 123.20 |
| 45 | MF0141 | அல்மா | 123.03 |
| 46 | MF0902 | வெதமுல்ல | 122.89 |
| 47 | MF0597 | கெட்டபுலா | 122.80 |
| 48 | MF0034 | ஸ்ட்ரேதஸ்பீ | 122.49 |
| 49 | MF0251 | க்லேன்லொச் | 122.48 |
| 50 | MF0505 | டீசைட் | 122.26 |
| 51 | MF0557 | மாவுஸ்ஸாகெலே | 122.11 |
| 52 | MF0692 | வோல்ட்ரிம் | 121.88 |
| 53 | MF0485 | போகவான | 121.40 |
| 54 | MF0984 | கைப்புகல | 121.15 |
| 55 | MF1003 | ஷெனன் | 120.99 |
| 56 | MF0503 | வூட்டன் | 120.83 |
| 57 | MF0840 | வென்ச்சர் | 120.41 |
| 58 | MF1254 | கொன்கோர்டியா | 120.25 |
| 59 | MF0674 | மே∴பில்ட் | 120.18 |
| 60 | MF0928 | டெல்மர் | 120.14 |
| 61 | MF0021 | கோர்டன் | 119.92 |
| 62 | MF0220 | டன்சினன் | 119.67 |
| 63 | MF0391 | கோனபிட்டிய குரூப் | 119.59 |
| 64 | MF0467 | கிரிஸ்லர் பார்ம் | 119.03 |
| 65 | MF0188 | எஸ்.டி கூம்ஸ் | 118.87 |
| 66 | MF0011 | தியகம வெஸ்ட் | 118.23 |
| 67 | MF0043 | சென் க்ளேயார் | 118.11 |
| 68 | MF0374 | பிரேன்ஸ்விக் | 118.04 |
| 69 | MF0492 | க்வின்ஸ்பரி | 118.01 |
| 70 | MF0646 | டொரிங்ட்டன் | 117.94 |
| 71 | MF0829 | எல்டன் ஹோல | 117.70 |
| 72 | MF0420 | கூல்பவ்ன் | 117.37 |
| 73 | MF0486 | கிர்கஸ்வோல்ட் | 116.87 |
| 74 | MF0663 | பொகவன்தலாவ | 116.23 |
| 75 | MF0276 | ஹேன்போர்ட் | 116.00 |
| 76 | MF0703 | கெம்பியன் | 115.15 |
| 77 | MF0012 | தியகம கிழக்கு | 115.09 |
| 78 | MF0705 | ஹவுத்தலே வெலி | 114.88 |
| 79 | MF1597 | டீ பஸ் | 114.28 |
| 80 | MF0670 | காட்ர்மோர் | 113.43 |
| 81 | MF0463 | மவுன்ட் ஜீன் | 112.18 |
| 82 | MF0062 | கௌனிய எஸ்டேட் | 111.61 |
| 83 | MF0322 | மவுன்ட் வெர்னோன் | 111.17 |
| 84 | MF0552 | வனராஜா | 111.17 |
| 85 | MF0468 | கிவ் | 110.45 |
| 86 | MF0078 | புலு பீல்ட | 109.90 |
| 87 | MF0645 | எல்பியன் | 109.74 |
| 88 | MF0790 | ஸ்டேர்டன் | 109.65 |
| 89 | MF0387 | புரோட்டோ∴ப் | 108.74 |
| 90 | MF0504 | சீன் | 108.32 |
| 91 | MF0383 | டோர்ட்டன் | 108.05 |
| 92 | MF0673 | முல்லோயா | 107.78 |
| 93 | MF0206 | லயநொர்ன் | 107.77 |
| 94 | MF0771 | வேவர்லி | 107.08 |
| 95 | MF0713 | மில்லிங்டன் | 106.52 |
| 96 | MF0343 | லபுகெலே | 106.47 |
| 97 | MF1512 | ரொசெல்ல | 105.91 |
| 98 | MF0890 | சென்.தெரேசியா | 105.82 |
| 99 | MF0300 | அபுசைட் | 105.49 |
| 100 | MF0770 | தங்ககெலெ | 105.13 |
| 101 | MF0351 | வெல்லஓயா | 104.87 |
| 102 | MF0568 | பம்பரகெலே குரூப் | 104.59 |
| 103 | MF0878 | ஹேவன்வெவ | 103.14 |
| 104 | MF0384 | டன்கல்ட் | 102.98 |
| 105 | MF0970 | கும்பலொலுவ | 99.09 |
| 106 | MF1039 | புருக்சைட் | 96.44 |
| 107 | MF1273 | நோர்ட்டன் | 95.90 |
| 108 | MF0392 | ஹைய் பொரஸ்ட் | 95.61 |
| 109 | MF0067 | லிடஸ்டெல் | 95.40 |
| 110 | MF0729 | இராகல குரூப் | 94.10 |
| 111 | MF0462 | கரோலினா | 93.64 |
| 112 | MF0349 | ரோத்ஸ்சயில்ட் | 91.05 |
| இரத்தினபுரி மாவட்டம் | | | |
| 1 | MF1387 | ஏ.சீ.யு. | 188.22 |
| 2 | MF1172 | நிவ் வித்தானகந்த | 176.57 |
| 3 | MF1392 | ஹிதெல்லன | 176.23 |
| 4 | MF1463 | பீக்வீவ் | 176.10 |
| 5 | MF0272 | பனில்கந்த | 172.55 |
| 6 | MF0946 | இரஜ்ஜுருவத்த | 172.32 |
| 7 | MF1441 | ∴பெல்கொன் | 170.37 |
| 8 | MF0347 | மட்டுவாகல | 161.56 |
| 9 | MF0614 | மாதெம்பே | 159.10 |
| 10 | MF1470 | கரவிட்ட | 157.77 |
| 11 | MF1519 | பரகடுவ | 157.49 |
| 12 | MF1537 | அயகம | 157.24 |
| 13 | MF1552 | சன்ஹில் | 156.95 |
| 14 | MF0181 | சிசிலியன் | 155.10 |
| 15 | MF1440 | நிவித்திகல | 154.53 |
| 16 | MF1416 | கோப்பகந்த | 154.27 |
| 17 | MF1442 | வெத்தேகல | 154.06 |
| 18 | MF1483 | கெலெக்சி | 153.57 |
| 19 | MF0295 | குட்டாபிட்டிய | 152.34 |
| 20 | MF0210 | ஹொவ்டன் | 151.47 |
| 21 | MF1487 | எடம்ஸ் வீவ் | 151.47 |
| 22 | MF1354 | பீக் பெரடயிஸ் | 150.31 |
| 23 | MF1281 | சென்.ஜோக்ஹிம் | 149.86 |
| 24 | MF1456 | டீர்வுட் | 148.81 |
| 25 | MF1551 | கலஹிட்டிய | 148.52 |
| 26 | MF1591 | எத்ஓய வத்த | 148.42 |
| 27 | MF1571 | காமரங்காபிட்டிய | 147.19 |
| 28 | MF0906 | பால்ம் கார்டன் | 147.01 |
| 29 | BF0155 | கங்கலகமுவ | 146.53 |
| 30 | MF0780 | ஹெவ்ப்பே | 145.82 |
| 31 | MF1478 | செனோரா | 145.54 |
| 32 | MF1217 | கல்படிதென்ன | 145.32 |
| 33 | MF0481 | எக்பார்த் | 145.07 |
| 34 | MF1572 | சம்பத் | 144.86 |
| 35 | MF1467 | தண்டுவன்கல வத்த | 144.69 |
| 36 | MF1496 | கோ-ப்-டீ | 143.52 |
| 37 | MF1363 | நாவலகந்த | 143.43 |
| 38 | MF1365 | நவகமுவஹேன | 142.77 |
| 39 | MF0905 | மில்லவிட்டிய | 142.71 |
| 40 | MF1459 | நிவ் லக்சகந்த | 142.60 |
| 41 | MF0183 | நிவ் கந்தகஸ்தேன | 142.40 |
| 42 | MF0393 | ஹேயிஸ் | 142.28 |
| 43 | MF1308 | நிவ் உடகந்த | 141.93 |
| 44 | MF0909 | எல்லர்ட்டன் | 141.60 |
| 45 | MF0490 | ஹெதர்லீ | 141.14 |
| 46 | MF1343 | கோண்காவத்தை | 141.09 |
| 47 | MF1368 | நிவ் டெம்பல் வீவ் | 141.01 |
| 48 | MF0296 | தொலொஸ்வெல்ல | 138.66 |
| 49 | MF0659 | ரைய் | 138.60 |
| 50 | MF0104 | வெல்லந்துர | 138.36 |
| 51 | MF1491 | நிவ் தொரலவிட்டியஹேன | 137.90 |
| 52 | MF0108 | போரோனுவ | 137.74 |
| 53 | MF0263 | வேவத்த | 137.72 |
| 54 | MF0594 | பொஸ்கொம்பி | 137.68 |
| 55 | MF1284 | நிவ் பனாவென்ன | 137.15 |
| 56 | MF1553 | ஸ்பிரீங் வீவ் | 136.88 |
| 57 | MF1418 | தொரலவிட்டியஹேன | 136.42 |
| 58 | MF1453 | கலவான | 136.26 |
| 59 | MF1480 | நிவ் ஹோப்வெல் | 135.96 |
| 60 | MF0619 | கலபொட | 135.40 |
| 61 | MF1495 | நில்வின் வீவ் | 134.36 |
| 62 | MF0168 | எந்தொன | 134.26 |
| 63 | MF0911 | தும்பர | 134.04 |
| 64 | MF1397 | ∴பர்ன்டேல் | 132.84 |
| 65 | MF0258 | பலாங்கொட தே சக்தி | 132.74 |
| 66 | BF0163 | தெல்கொட | 132.11 |
| 67 | MF0546 | ஸ்பிரிங்வுட் | 131.90 |
| 68 | MF0624 | விக்கிலிய | 131.83 |
| 69 | MF1317 | தேஷிக்கா | 131.01 |
| 70 | MF1466 | டீ லங்கா | 129.81 |
| 71 | MF0801 | ஹபுகஸ்தென்ன | 129.26 |
| 72 | MF1531 | இஹல பனாபிட்டிய | 129.15 |
| 73 | MF0262 | ஹப்பர் பலாங்கொட | 128.91 |
| 74 | MF1075 | கடிகல்ஹேன | 128.81 |
| 75 | MF0367 | சிசில்டன் | 128.53 |
| 76 | MF1601 | புலு ஹில்ஸ் | 128.26 |
| 77 | MF0369 | மாரதென்ன | 128.22 |
| 78 | MF0103 | ஓபாத்த | 128.05 |
| 79 | BF0150 | ஷர்வுட் | 125.60 |
| 80 | MF1458 | செரோன் | 124.38 |
| 81 | MF1488 | குக்குலேகங்க | 122.48 |
| 82 | MF0083 | ரில்ஹேன | 122.41 |
| 83 | MF0200 | பெட்டியாகல | 122.34 |
| 84 | MF0107 | நீலாகம | 121.80 |
| 85 | MF0625 | நிவ் இராஸ்ஸகல | 117.73 |
| 86 | MF1554 | தண்டுவன்கல CTC | 102.46 |

**பச்சை தேயிலை இலை வழங்குனர்கள் யாரேனும் தனது பச்சை தேயிலை இலை வழங்கியதற்கு உரிய பணம் கிடைக்கவில்லை எனில் தயவு செய்து உதவி தேயிலை ஆணையரிடம் அல்லது முடிந்தவரை என்னிடம் முறையீடு செய்யவும்.**

**பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்கள்**

உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், விசாகா மாவத்தை, புதிய பதுளை வீதி, பண்டாரவளை.
தொலைபேசி / தொலைநகல் - 057-2222812

**கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்கள்**

உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-140, அம்பகமுவ வீதி, கம்பளை.
தொலைபேசி / தொலைநகல் - 081-2352279

**இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்கள்**

உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-61/1, புதிய நகரம், இரத்தினபுரி.
தொலைபேசி / தொலைநகல் - 045-2222136

**மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள்**

உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-23, அளுத் மாவத்தை, உயன்வத்த, மாத்தறை.
தொலைபேசி / தொலைநகல் - 041-2222636

**காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு தவிர)**

உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், வலஹன்துவ வத்த, வலஹன்துவ, காலி.
தொலைபேசி / தொலைநகல் - 091-2232052

**களுத்துறை மற்றும் காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேசத்திற்கான செயலாளர் பிரிவு)**

உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், வதுரான வீதி, பதுரலிய.
தொலைபேசி / தொலைநகல் - 034-2247444

**நுவரெலியா மாவட்டம்**

உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-10, நானுஓயா வீதி, கெலேகால, நுவரெலியா.
தொலைபேசி - 052-2234695
தொலைநகல் - 052-2234686

**தேயிலை ஆணையாளர்**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல. 574, காலி வீதி, கொழும்பு 03.**

- ❖ பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்கள் - தயவுசெய்து தேயிலை தயாரிக்க முதிர்ச்சியடையாத மற்றும் சேதமடையாத பச்சை தேயிலை இலைகளை கொள்வனவு செய்யவும்.
- ❖ தேயிலை வைத்திருப்பவர்கள், பச்சை இலை விற்பனையாளர்கள் - முதிர்ச்சியடையாத மற்றும் சேதமடையாத பச்சை தேயிலை இலைகளை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில் எச்சரிக்கையாக இருங்கள்.
- ❖ சிறியளவிலான தேயிலை உற்பத்தியாளர்கள் - பச்சை தேயிலை இலைகளை உடனடி பணத்திற்கு வழங்குவதைத் தவிர்க்கவும், அப்படியெனின் நீங்கள் ஒரு பாரிய இழப்பை சந்திக்க நேரிடும்.

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## வட மேல் மாகாண சபை

## சமூக சேவைகள் திணைக்களம்

1. அட்டவணையில் வழங்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து **குருநாகல். சமூக சேவைகள் திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர்** முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் CIDA பதிவை பூர்த்தி செய்திருப்பவராகவுமிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை **குருநாகல், மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி, 2 ஆம் மாடி, ‘‘ஈ’’ கட்டிடம், சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளரிடமிருந்து** பெற்று அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
   தொலைபேசி இல.: 037-2223484, 037-2224970. தொலைநகல்: 037-2224976.

4. **2023 ஜூலை 29 ஆம் திகதியிலிருந்து 2023 ஜூலை 29 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் குருநாகல், மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி, 2 ஆம் மாடி, ‘‘ஈ’’ கட்டிடம், சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்படலாம்.**

5. **2023 ஜூலை 31 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, சமூக சேவைகள் திணைக்களம், ‘‘ஈ’’ கட்டிடம், 2 ஆம் மாடி. மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி, குருநாகல்** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

6. **விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் மொத்த ஆகுசெலவு மதிப்பீடானது 50 மில்லியனுக்கு குறைவாக விருப்பதனால் 04/2016(ii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன பிரயோகப்படுத்தப்படும்.**

| விலைமனு குறியீட்டு இல. | ஒப்பந்த தலைப்பு | பிரிவு | தேவைப்படும் CIDA தரம் (கட்டிடங்கள்) | விலைமனு உத்தரவாதத் தொகை (ரூபாவில்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| SSD/ACC02/Renovation/EH/01 | மாஹோ யத்தீகம மீமுத்தா முதியோர் இல்லத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள் | மாஹோ | சி-9-சி-8 | 8,000.00 | 2,500.00 |
| SSD/ACC02/Renovation/EH/02 | பமுனகொட்டுவ ரத்தன பியச நிவஸ்னய முதியோர் இல்ல கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள் | வாரியபொல | சி-9-சி-8-சி-7 | 32,000.00 | 3,000.00 |
| SSD/ACC02/Renovation/EH/03 | வீரம்புகெதெர, கலுகமுவ, சீலவதி முதியோர் இல்ல கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள் | குருநாகல் | சி-9-சி-8-சி-7 | 22,000.00 | 3,000.00 |
| SSD/ACC02/Renovation/EH/04 | மாதம்பே, பொத்துவில, டி.எம்.டி.சில்வா முதியோர் இல்ல கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள் | வென்னப்புவ | சி-9-சி-8-சி-7 | 28,000.00 | 3,000.00 |
| SSD/ACC02/Renovation/PS/01 | முந்தல் முன்கல்விசார் மற்றும் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | புத்தளம் | சி-9-சி-8 | 6,000.00 | 2,500.00 |
| SSD/ACC02/Renovation/PS/02 | அமபன்பொல முன்கல்விசார் மற்றும் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | மாஹோ | சி-9-சி-8-சி-7 | 33,000.00 | 3,000.00 |
| SSD/ACC02/Renovation/PS/03 | கல்கமுவ முன்கல்விசார் மற்றும் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | மாஹோ | சி-9-சி-8 | 9,000.00 | 2,500.00 |
| SSD/ACC02/Renovation/PS/04 | போல்கஹாவெல முன் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | குருநாகல் | சி-9-சி-8-7 | 31,000.00 | 3,000.00 |
| SSD/ACC02/Renovation/PS/05 | பிங்கிரிய முன்கல்விசார் மற்றும் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | குளியாப்பிட்டிய | சி-9-சி-8-7 | 22,000.00 | 3,000.00 |
| SSD/ACC02/Renovation/PS/06 | சிலாப முன்கல்விசார் மற்றும் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | வென்னப்புவ | சி-9-சி-8-7 | 27,000.00 | 3,000.00 |
| SSD/ACC02/Renovation/PS/07 | பன்னல முன்கல்விசார் மற்றும் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | குளியாப்பிட்டிய | சி-9-சி-8 | 10,000.00 | 2,500.00 |
| SSD/ACC02/Renovation/PS/08 | நிக்கவெரட்டிய முன்கல்விசார் மற்றும் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | வாரியபொல | சி-9-சி-8 | 8,000.00 | 2,500.00 |
| SSD/ACC02/Renovation/PS/09 | நிக்கவெரட்டிய மேற்கு முன்கல்விசார் மற்றும் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | குளியாப்பிட்டிய | சி-9-சி-8-சி-7 | 31,000.00 | 3,000.00 |
| SSD/ACC02/Renovation/PS/10 | மல்லவப்பிட்டிய, யக்காபிட்டிய முன்கல்விசார் மற்றும் வாழ்தொழில் பயிற்சி நிலையத்தில் கட்டிட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி வசதிகள | குருநாகல் | சி-9-சி-8-சி-7 | 45,000.00 | 3,000.00 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சமூக சேவை திணைக்களம் (வமேமா),**
**குருநாகல்.**
**2023.07.08**

# விலைமனு அழைத்தல்

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைக் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு உரித்தான கீழ்க் காணப்படும் அலகுகளிற்கு குறித்த கொள்வனவுகளிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | கருமங்களின் விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் செல்லுபடிக் காலம் | | | விலைமனுப் படிவக் கட்டணம் |
| | | | காசாக எனின் | வங்கி வரைவு ஒன்றெனின் | பிணையம் செல்லுபடிக் காலம் | |
| 01 | விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான பண்ணைகளில் Power Harrow 02 கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/26/(2023) | 13,800/- | 27,600/- | 02.11.2023 | ரூ. 3,000.00 |
| 02 | விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான பண்ணைகளில் 3 தட்டுக்களுடன் 09 தட்டு கலப்பைகளை கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/27/(2023) | 28,125/- | 56,250/- | 16.11.2023 | ரூ. 3,000.00 |
| 03 | விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான நுவரெலியா வலயத்தில் விதை உருளை கிழங்கு பண்ணைகளில் டிரக்டர் இற்கான டயர் மற்றும் டியூப் கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/29/(2023) | 20,690/- | 41,380/- | 02.11.2023 | ரூ. 3,000.00 |
| 04 | Solar Power அமைப்பு உதவியில் செயற்படும் நீர் பம்பியை கொள்வனவு செய்தல் - வல்விட்ட அரச விதை உற்பத்திப் பண்ணை. | SPD/2/5/4/20/(2023) | 20,000/- | 40,000/- | 02.11.2023 | ரூ. 3,000.00 |

இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்காகப் பெற்றுக் கொள்ளும் விலைமனுப்படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் மீளளிக்கப்படாத மேற்படி ‘E’ நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிருவாக அலுவலகரிடம் சமர்ப்பித்து 2023.07.11 முதல் 2023.07.31 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர் இல 02 இற்காக விலைமனு சமர்ப்பிக்கும், விலைமனுதாரர்கள் 1987 இல. 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுப் படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் ‘தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதெனிய’ என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் மேற்படி அட்டவணையில் Dஇன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத் தொகையொன்றை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன் வங்கி வரைவு ஒன்றாக பிணை வைப்புச் செய்வதாயின் அது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் 2023.08.01 அன்று பி.ப. 2.00 இற்கு முடிவுறுவதுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதெனிய,**
2023.07.10
**081-2388106/122**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/LP/23/PT/04/54 | 10 Nos. Mild Steel Channel Irons 200MM X 75 MMX 23.4 KG/M (EACH 6.0M Long) | 25,000.00 | 1,000.00 | 27.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/13/54 | Spares for RAM Twin Spreader | 20,000.00 | 1,000.00 | 27.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/03/051 | Braring Housing for Spin Turn Device of Mitsui RTGS at JCT - 06 Nos | 50,000.00 | 1,000.00 | 27.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/03/058 | 500 Metre - CU/ XLPE/SWA/PVC Cable 4 CX 35 SQMM, 600/1000V Armoured | 45,000.00 | 1,000.00 | 28.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/03/057 | 500 Meter - CU/XLPE/SWA/PVC Cable 4X16SQMM, 600/1000V Armoured | 25,000.00 | 1,000.00 | 28.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/14/056 | Dissolved Acetylene Gas for Year 2023 - 2024 | 275,000.00 | 1,000.00 | 28.07.2023 13.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2023 ஜூலை 07ஆம் திகதியிலிருந்து 4ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை
முதல் 15 சொற்களுக்கு
330/- ரூபா
ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
E-Mail :-
classified@lakehouse.lk
011 2 429 383 / 011 2 429 347

## தெவிநுவர பிரதேச சபை

## தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் எசல உற்சவம் - 2023

## எசல பொருட் சந்தையில் தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளை விற்பனை செய்வதற்கான கேள்வி அழைப்பு

தெவிநுவர உத்பலவன்ன ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் எசல பெரஹரா உற்சவத்திற்கு சமமாக நடத்தப்படும் எசல பொருட் சந்தைக்கு தற்காலிக விற்பனைக் கூடம் மற்றும் நிலத்துண்டுகளை விற்பனை செய்வதற்காக கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. இத்தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளில் விற்பனைச் செய்யும் விடயங்கள் பொருட் சந்தை நடத்தப்படும். தினமான 2023.08.01 முதல் 2023.08.08 வரையான காலத்திற்கு அமுலில் இருக்கும்.

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு தெவிநுவர பிரதேச சபையின் வழங்கல்கள் பிரிவில் 2023.07.10 முதல் 2023.07.21 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை கேள்வி ஆவணத் தொகுதியை மீளளிக்கப்படாத ரூ. 300.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் பெற்றுக்கொள்ள வாய்ப்பு உண்டு. அவ்வாறே இலங்கை வங்கியின் தெவிநுவர கிளை கணக்கு இல. **4441084** எனும் செயலாளர், தெவிநுவர பிரதேச சபை என்ற கணக்கிற்கு குறித்த தொகையை வரவு வைத்து வங்கிப் பற்றுச்சீட்டின் தெளிவான போட்டோ ஒன்றை வட்ஸ்அப் இலகத்திற்கு அனுப்பியும் கேள்விப் படிவத்தொகுதியொன்றை வட்ஸ்அப் வழியாக பெற்றுக்கொள்ளலாம்.

03. 2023ஆம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டிய தற்காலிக வர்த்தக கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகள் பற்றிய வரைபடம் தெவிநுவர பிரதேச சபை அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்படுவதுடன், அதனடிப்படையில் உங்களால் தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளுக்காக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். தற்காலிக விற்பனைக் கூடம் மற்றும் நிலத்துண்டுகள் பற்றிய வரைபடம், குறைந்த பட்சம் கேள்வித் தொகை பற்றிய விபரம் அடங்கிய கேள்வி ஆவணத் தொகுதியை **071-1190755** தொ.பே. இலக்கத்தின் மூலம் **whatsapp** வழியாக அல்லது **devinuwara.ps@gmail.com** என்ற முகவரிக்கு ஈமெயில் செய்தியை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி ஆவணங்களுக்காக வைப்பு செய்ய வேண்டிய விலைமனுக்கள் கீழ்க்காணுமாறு

| | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்புக் கட்டணம் |
|---|---|---|
| தற்காலிக விற்பனைக் கூடங்கள் | ரூ. 300.00 | குறைந்த பட்ச கேள்வித் தொகையில் 10% ஆகும். |
| நிலத்துண்டுகள் | ரூ. 300.00 | குறைந்த பட்ச கேள்வித் தொகையில் 10% ஆகும். |

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வியுடன் மீளளிக்கப்படும் பாதுகாப்புப் பிணை வைப்புக் கட்டணத்தை தெவிநுவர பிரதேச சபையின் காசாளர் பிரிவிற்கு காகாச வைப்புச் செய்து குறித்த பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறே இலங்கை வங்கியின் தெவிநுவர கிளையின் கணக்கு இலக்கம் 4441084 எனும் செயலாளர், தெவிநுவர பிரதேச சபை கணக்கிற்கு வரவு வைத்து வங்கி பற்றுச்சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (இது பற்றிய மேலதிக விபரங்களை 0711190755 இலக்கத்தில் விசாரியுங்கள்.)

06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.07.22 மு.ப. 9.30 இற்கு அல்லது அதற்கு முன்பு "செயலாளர், பிரதேச சபை, தெவிநுவர" இற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டு வந்து பிரதேச சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டிற்கான தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளை விற்பனை செய்தல்" என்று குறிப்பிட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் சமர்ப்பிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த பின்னர் 2023.07.22 மு.ப. 10.00 இற்கு பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், சமுகமளிப்பதற்கு விரும்பும் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு அதற்காக சமுகமளிக்கலாம்.

07. கேள்விகள் வழங்குதல் பற்றிய இறுதித் தீர்மானம் தெவிநுவர பிரதேச சபையின் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**செயலாளர்,**
**தெவிநுவர பிரதேச சபை.**
**தொலைபேசி இலக்கம் 041-2222571**

**தெவிநுவர பிரதேச சபை**
**தலைமையகத்தில்.**
2023.07.10ம் திகதி

## பொது மக்களின் பிரேரணைகளைக் கோரல்

இலங்கையில் தற்போது காணப்படுகின்ற காப்புறுதிச் சட்டங்களை மீளாய்வு செய்து பூகோள தரநியமங்களுக்கு இசைவாக கொண்டுவருவதற்கு கௌரவ நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு குழுவை நியமனம் செய்துள்ளார்.

மேற்படி குழு தற்போது இது தொடர்பில் காணப்படுகின்ற சட்டங்களை மீளாய்வு செய்வதற்கு ஊக்கம் கொண்டுள்ள தரப்பினர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பிரேரணைகளை கோருகின்றது. மேற்படி பிரேரணைகளை உதவிச் செயலாளர் (சட்டம்), நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு 2023 யூலை மாதம் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். (தயவு செய்து 'காப்புறுதி சட்டங்களை திருத்தம் செய்தல்' என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுக.)

இது பற்றிய பிரேரணைகளை legal@moj.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியூடாகவும் அனுப்பிவைக்க முடியும்.

### 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரிப்பு (மறுசீரமைப்பு) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டம் (460)ஆம் அத்தியாயம் 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறியீட்டு இலக்கம் டிக்/லேன்/02/61

இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசு சுவீகரிக்க உத்தேசித்துள்ளது மேலதிக விபரங்களுக்கு 2023.01.18ஆம் திகதியின் 2315/24 இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : திக்குவெல்ல |
| கிராம சேவையாளர் பிரிவு | : வெவுருகன்னல |
| கிராமத்தின் பெயர் | : வெவுருகன்னல |
| காணியின் பெயர் | : குலுகஹவத்த ஹேவத் தன்கஹவத்த |
| திட்ட இலக்கம் | : மு.பி. மாறை 2905 |
| துண்டு இலக்கம் | : மு.பி. மாறை 2905 துண்டு இலக்கம் 01 மற்றும் 02 |

**ஸஸந்த அத்தனாயக,**
**பிரதேச செயலாளர்,**
**திக்குவெல்ல**
**2023.07.10ஆம் திகதி**
**திக்குவெல்ல பிரதேச செயலகம்**

The Housewives' companion
Classifieds on
Daily News

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

கடற்றொழில் அமைச்சு

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை

NAQDA

## கேள்விக்கோரல்

### வழங்கல் தொடர்பான அறிவித்தல்

01. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் சபை திணைக்கள (சிறு) தலைவரால் கீழ்குறிப்பிடப்படும் சேவைகளை வழங்குவதற்காக தகைமைகளையுடைய கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | பிணை பாதுகாப்பு மற்றும் செல்லுபடியாதல் (இ.ரூ) | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூ) | கேள்விப்பத்திரங்கள் வெளியிடும் இறுதித்திகதி மற்றும் நேரம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| **NQ/DPC/2023/NCB/S/06** ரம்படகல்ல பல்வகை மீன் இனப்பெருக்க மற்றும் பயிற்சி நிலையத்திலுள்ள பயிற்சியாளர்களுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்குதல் - 2023/2024 | இ.ரூ 50,000.00 121 நாட்கள் (2023.11.18) | இ.ரூ 3,500.00 | 2023.07.20 ஆம் திகதி பி.ப 3.00 வரை | 2023.07.21 ஆம் திகதி பி.ப 2.00 வரை |

02. தகைமையுடைய கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை **NAQDA** யின் உத்தியோகப்பூர்வ இணையத்தளமான **www.naqda.gov.lk** ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**திணைக்கள வழங்கல் சபை (சிறு),**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை,**
**41/1, புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்லை.**
**2023.07.10**

## போதனா வைத்தியசாலை - குளியாப்பிட்டி

## கட்டிட நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல் விடயங்களுக்காக கேள்வி கோரல்

01. குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையின் கீழ்க்காணும் கட்டிட நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல் விடயங்களுக்காக குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுவினால் தகைமையுள்ள, ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023.07.28 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல. | இணைப்பு இலக்கம் | ஒப்பந்த விபரம் | ICTAD தரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ) | மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|---|
| 01 | THKUL/ ACC/FM09/ Cons/15/2023 | Extension of Emergency Exit of Drug Store | C7, C6 and C5 Building Construction | 3,500.00 | 185,000.00 | 12.3 |

02. தகைமையுள்ள ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை, மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு சமமான மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாளரிடம் காசாக செலுத்திய பின்னர் 2023.07.10ஆம் திகதி முதல் 2023.07.27ஆம் திகதி வரை வாரவேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையின் கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. சமர்ப்பிக்கப்படும் சகல கேள்வியுடனும் மேற்பட அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதியுடைய இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியின் (Construction Guarantee fund) மூலம் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்ற சமர்ப்பித்தல் கட்டாயமாகும் அது 2023.11.24ம் திகதி வரை செல்லுபடியாவதுடன் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை குளியாப்பிட்டி பெயரில் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் 'மூலப் பிரதி' 'நகல் பிரதி' என குறிப்பிடப்பட்டு வேறுவேறு உறைகளில் இடப்பட்டு ஒரு பொறியிடப்பட்ட உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூளையில் உடன்படிக்கையின் பெயரைக் குறிப்பிட்டு 2023.07.28 பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபாலில் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டி என்ற பெயருக்கு அனுப்பப்பட வேண்டியதுடன், கையொடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகை உள்ளிடும் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்களை இவ் அலுவலகத்தில் கட்டணங்கள் இன்றியே பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் எந்தக் காரணத்திற்காகவும் ஏற்கப்பட மாட்டாது.

07. கேள்விகள் திறக்கப்படல் 2023.07.28 பி.ப. 2.15 இற்கு குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையின் அலுவலக கட்டிடத்தில் கூட்ட அறையில் நடைபெறுவதுடன் அத்தினத்தில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகளிக்கலாம்.

08. இக் கேள்வி கோரல் பற்றிய மேலதிக விபரங்களை தெளிவு படுத்திக்கொள்வதற்காக 037-2281261 நீடிப்பு இல. 295/309 அல்லது 037-2284597 என்ற தொ.பே. இலக்கங்களை அழைத்து குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் விசாரித்தரியலாம்.

**பெறுகைக்குழுவின் தலைவர்,**
**போதனா வைத்தியசாலை,**
**குளியாப்பிட்டி.**
**2023 ஜூலை 10**

## கேள்வி அறிவித்தல் — இலங்கைத் தரைப்படை

1. இலங்கைத் தரைப்படைக்கு **ஓர்கனைசர் டயரி, எக்சகிவ்டிவ் டயரி/ சுவர் கலெண்டர், டெஸ்க் டயரி மற்றும் மேசைக் கலெண்டர்களை** உருவாக்கல், வடிவமைத்தல், அச்சிடல் மற்றும் வழங்குவதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமை, பொறியிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

| கோவை இலக்கம் | உப்படி | கேள்விப் படிவங்கள் வழங்குதல் | கேள்விகள் திறக்கப்படல் (திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| AHQ/D/C/I | 2024ஆம் ஆண்டிற்கான ஆர்மி ஓர்கனைசர் டயரி (அண்ணளவாக 3600 எண்ணிக்கையில்) | 2023 ஒகஸ்ட் 01 | 2023 ஒகஸ்ட் 02 மு.ப. 11.00 மணி |
| AHQ/D/C/II | 2024ஆம் ஆண்டிற்கான ஆர்மி எக்சகிவ்டிவ் டயரி (அண்ணளவாக 10,650 எண்ணிக்கையில்) | 2023 ஒகஸ்ட் 01 | 2023 ஒகஸ்ட் 02 மு.ப. 11.00 மணி |
| AHQ/D/C/III | 2024ஆம் ஆண்டிற்கான ஆர்மி டெஸ்க் டயரி (அண்ணளவாக 30,000 எண்ணிக்கையில்) | 2023 ஒகஸ்ட் 01 | 2023 ஒகஸ்ட் 02 மு.ப. 11.00 மணி |
| AHQ/D/C/IV | 2024ஆம் ஆண்டிற்கான ஆர்மி சுவர் கலெண்டர் (அண்ணளவாக 188,200 எண்ணிக்கையில்) | 2023 ஒகஸ்ட் 01 | 2023 ஒகஸ்ட் 02 மு.ப. 11.00 மணி |
| AHQ/D/C/V | 2024ஆம் ஆண்டிற்கான ஆர்மி மேசைக் கலெண்டர் (அண்ணளவாக 1000 எண்ணிக்கையில்) | 2023 ஒகஸ்ட் 01 | 2023 ஒகஸ்ட் 02 மு.ப. 11.00 மணி |

2. கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படை தலைமையகம், நலன்புரி பணியகத்தில் ஒவ்வோர் உருப்படிக்கும் (மேசைக் கலெண்டர் தவிர்த்து) ஓர் மீளளிக்கப்படாத ரூ. 5,000.00 வீதம் செலுத்திய பின்பு வேலை நேரங்களில் 2023 ஒகஸ்ட் 11 முதல் கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படை தலைமையகம், கேள்விகள் திறக்கப்படும் பிரிவில் (081-3840776) இருந்து மாதிரிகளுடனான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 076-5309734/ 011-2514971/ 011-2514992) **சாம்பிள்களுடனான முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 2023 ஒகஸ்ட் 02ம் திகதி மு.ப. 11.00 இற்கு முன்பு மேற்படி முகரியிலுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக கையளித்தல் வேண்டும்.**

3. மேலதிக தகவல்கள் அல்லது தொடர்புகளுக்கு தயவு செய்து கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படை தலைமையகம், ஊழியர் குழாமின் அலுவலக பிரதானி, Colonel (Coord)ஐ தொடர்பு கொள்ளுங்கள். (தொலைபேசி: 076-8574428).

**தரைப்படைத் தளபதி**
**தரைப்படைத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.**

# பாக். டெஸ்ட் தொடருக்கான இலங்கை குழாத்தில் மானசிங்கவுக்கு அழைப்பு

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இலங்கை குழாத்தில் சுழற்பந்து வீச்சாளர் லக்ஷித மானசிங்க அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை வந்திருக்கும் பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் எதிர்வரும் ஜூலை 16ஆம் திகதி காலியில் அரம்பமாகவுள்ளது. இதில் இணைக்கப்பட்டிருக்கும் 23 வயதான மானசிங்க 2022 இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கு அழைக்கப்பட்டபோதும் கன்னி டெஸ்ட்டில் வாய்ப்புப் பெறத் தவறினார். இந்த டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி ஜூலை 24ஆம் திகதி கொழும்பு, எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மானசிங்க கடந்த மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான நான்கு நாட்கள் கொண்ட உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடரில் இலங்கை ஏ அணியில் இடம்பெற்றிருந்தார். பல்லேகல மற்றும் பி சரா ஓவலில் நடைபெற்ற அந்தத் தொடரின் இரு போட்டிகளிலும் அவர் 12 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தற்போதைய மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் கடைசியாக ஆடிய முதல்தர போட்டியில் நீர்கொழும்பு அணிக்கு எதிராக எஸ்.எஸ்.சி அணி சார்பில் மொத்தம் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார். அந்தப் போட்டியில் எஸ்.எஸ்.சி அணி இன்னிங்ஸ் மற்றும் 13 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

மானசிங்கவின் வருகையால் 29 வயதான லெக் ஸ்பின் சுழல் வீரர் துஷான் ஹேமன்தவுக்கு இலங்கை டெஸ்ட் அணியில் இடம் கிடைக்கவில்லை. தற்போது இலங்கை ஒருநாள் அணியில் இடம்பெற்றிருக்கும் ஹேமன்த அண்மையில் நடந்த அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கு இலங்கை குழாத்தில் இடம்பெற்றபோதும் அணியில் விளையாட வாய்ப்பு கிடைக்கவில்லை.



இதன்போது இடது கை சுழற்பந்து வீச்சாளர் லசித் எம்புல்தெனிய நீக்கப்பட்டு அவருக்கு பதில் பிரவீன் ஜயவிக்ரம 15 பேர் கொண்ட குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். ரமேஷ் மெண்டிஸ் மற்றும் பிரபாத் ஜயசூரிய சுழற்பந்து வீச்சில் அணியை வழிநடத்தவுள்ளனர்.

இந்தக் குழாத்தில் அசித்த பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டோ மற்றும் கசுன் ராஜித்த ஆகிய மூன்று வேகப் பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளனர். எனினும் அசித்த டெங்கு காய்ச்சலில் இருந்து அண்மையிலேயே மீண்டு வந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியிலேயே ஆடவுள்ளார். அவருக்கு பதில் இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க இலங்கை குழாத்தில் இடம் பெற்றிருப்பதாக தேர்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

22 வயதான மதுஷங்க டெஸ்ட் போட்டிகளில் சோபித்து வரும் நிலையில் லஹிரு குமார மற்றும் துஷ்மன்த சமீர ஆகியோர் காயம் காரணமாக அணியில் இடம் பெறவில்லை. அதேபோன்று அயர்லாந்து தொடரில் இலங்கை குழாத்தில் இடம்பெற்றிருந்த மிலான் ரத்நாயக்கவுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் இடம்பெற்ற வீரர்கள் துடுப்பாட்ட வரிசையில் தமது இடங்களை தக்கவைத்துக்கொண்டுள்ளனர். இதனால் பதும் நிசங்க அணியில் இடம்பெறாத நிலையில் அணித் தலைவர் திமுத் கருணாரத்னவுடன் ஆரம்ப வீரராக நிஷான் மதுஷ்க செயற்படவுள்ளார். நியூசிலாந்து தொடரில் முதல் முறை இலங்கை டெஸ்ட் அணியில் இடம்பிடித்த மதுஷ்க அயர்லாந்துக்கு எதிரான தனது மூன்றாவது சர்வதேச போட்டியிலேயே இரட்டை சதம் (205) பெற்றார். சதீர சமரவிக்ரமவும் அணியில் தனது இடத்தை தக்கவைத்துக்கொண்டார்.

இலங்கை குழாம்: திமுத் கருணாரத்ன (தலைவர்), குசல் மெண்டிஸ், அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், நிஷான் மதுஷ்க (வி.கா.), சதீர சமரவிக்ரம, ரமேஷ் மெண்டிஸ், பிரபாத் ஜயசூரிய, லக்ஷித மானசிங்க, பிரவீன் ஜயவிக்ரம, அசித்த பெர்னாண்டோ/ டில்ஷான் மதுஷங்க, விஷ்வ பெர்னாண்டோ, கசுன் ராஜித்த.

## கருணாரத்னவுக்கு காயம்



இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன பின் தொடை பகுதியில் தசைப் பிடிப்பால் பதிக்கப்பட்டுள்ளார். இதனால் அவர் நேற்று (09) நடைபெற்ற உலகக் கிண்ண தகுதிகாண் தொடரின் நெதர்லாந்துக்கு எதிரான இறுதிப் போட்டியிலும் பங்கேற்கவில்லை.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடர் விரைவில் நடைபெறவிருப்பதால் காயம் மேலும் தீவிரம் அடைவதை தவிர்ப்பதற்காக நேற்றைய போட்டியில் ஆடவில்லை என்று கருணாரத்ன போட்டிக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (06) ஆரம்பமாகவுள்ளது.

“இந்த இறுதிப் போட்டியில் ஆடாதது கவலை அளித்த போதும் அதனை விடவும் டெஸ்ட் போட்டி முக்கியமாக உள்ளது. அதற்குத் தான் எனது முன்னுரிமை உள்ளது. வருடத்திற்கு நான்கு, ஐந்து டெஸ்ட் போட்டிகள் தான் எமக்குக் கிடைக்கின்றன. இந்த வருடத்தில் இருக்கும் கடைசி டெஸ்ட் தொடர் இது. அதற்கு முடியுமானவரை தயாராவதே எனது இலக்கு” என்றும் கருணாரத்ன தெரிவித்தார்.

## இலங்கை வந்தது பாகிஸ்தான் அணி



இலங்கை அணிக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுவதற்காக பாகிஸ்தான் அணி நேற்று (09) கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தது.

எமிரேட்ஸ் ஏர்லைன்ஸின் ஏ.கே. 650 விமானத்தில் நேற்று காலை 9 மணிக்கு இலங்கையை வந்தடைந்த பாகிஸ்தான் அணியில் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் என 27 பேர் இடம்பெற்றிருந்தனர்.

பாகிஸ்தான் அணியை வரவேற்க இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் கட்டுநாயக்க விமானநிலையத்திற்கு வந்திருந்ததோடு இதனையொட்டி விமான நிலையத்தில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னர் பாகிஸ்தான் அணி ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் வரும் ஜூலை 11 மற்றும் 12ஆம் திகதிகளில் இரு நாட்கள் கொண்ட பயிற்சிப் போட்டி ஒன்றில் ஆடவுள்ளது.

இதனைத் தொடர்ந்து காலி செல்லும் பாகிஸ்தான் அணி இலங்கைக்கு எதிராக ஜூலை 16 தொடக்கம் 20 ஆம் திகதி வரை முதல் டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி ஜூலை 24 தொடக்கம் 28 ஆம் திகதி வரை கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் முக்கிய டெஸ்ட் மைதானமாக இருக்கும் எஸ்.எஸ்.சியில் நீண்ட இடைவெளிக்கு பின்னரே டெஸ்ட் போட்டி ஒன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த டெஸ்ட் தொடர் 202325 உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்திற்கான போட்டிகளாக நடைபெறுவதால் இரு அணிகளுக்கும் முக்கியமானதாகும்.

## ஆத்திமுனை வொரியஸ் வெற்றி



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

பொத்துவில் பசரிச்சேனைபிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆத்திமுனை வொரியஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

பசரிச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (07) நடைபெற்ற இறுதிப் போட்டியில் பசரிச்சேனை குடாக் கல்வி டைமன்ஸ் அணியை எதிர்கொண்ட வொரியர்ஸ் 10 ஓவர்களுக்கு 103 ஓட்ட வெற்றி இலக்கை நிர்ணயித்து எதிரணியை 63 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது. பொத்துவில் அல் அக்சாவிளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.மாபீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பணப்பரிசுடன் வெற்றிக்கிண்ணங்களை வழங்கினார்.

## வுஷு போட்டியில் கடற்படை சம்பியன்




12ஆவது பாதுகாப்பு சேவை வுஷு போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் கடற்படை சம்பியன் பட்டத்தை வென்றது.

வெலிசர கடற்படை வளாகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்தப் போட்டியின் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்த கடற்படை, ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் ஒட்டுமொத்த சம்பியன் பட்டத்தையும் வென்றது.

மேலும், இந்தப் போட்டியின் இறுதி நாளின் பிரதம அதிதியாக இலங்கை கடற்படை பிரதி தலைமை அதிகாரி மற்றும் நடவடிக்கைகள் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க கலந்து கொண்டதோடு, இந்த நிகழ்வில் முப்படைகளின் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.




# உலகக் கிண்ண தகுதிகாண் தொடர் இலங்கை அணி வசம்

நெதர்லாந்துக்கு எதிரான உலகக் கிண்ண தகுதிகாண் தொடரின் இறுதிப் போட்டியில் 128 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டிய இலங்கை அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

ஹராரேயில் நேற்று (09) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் 47.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களை பெற்றது.

சஹன் ஆரச்சிகே நிதானமாக ஆடி 71 பந்துகளில் 57 ஓட்டங்களை பெற்று இலங்கை அணி ஸ்திரமான ஓட்டங்களை பெற உதவினார். ஆரச்சிகே ஆடிய இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டி இதுவாகும். குசல் மெண்டிஸ் 52 பந்துகளில் 43 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த நெதர்லாந்து விக்கெட்டுகளை இலங்கை பந்துவீச்சாளர்கள் அடுத்தடுத்து வீழ்த்தினர். இதனால் அந்த அணி 23.3 ஓவர்களில் 105 ஓட்டங்களுக்கே சுருண்டது.

பந்துவீச்சில் மஹீஷ் தீக்ஷன 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு டில்ஷான் மதுஷங்க 3 விக்கெட்டுகளையும் வனிந்து ஹசரங்க இரண்டு விக்கெட்டுகளையும் பதம்பார்த்தனர்.

இதன்படி உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் இலங்கை ஆடிய அனைத்து போட்டிகளிலும் வெற்றியீட்டியது. இதன்மூலம் இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்தத் தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம் கண்ட நெதர்லாந்து அணியும் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

## சூடானில் இராணுவம் நடத்திய வான் தாக்குதலில் 22 பேர் பலி



சூடான் இராணுவம் தலைநகர் கார்டூமில் நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது 22 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் பலர் காயமடைந்திருப்பதாக பார்த்தவர்கள் மற்றும் அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் இருப்பதாக பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

நைல் நதிக்கரையில் தலைநகர் கார்ட்டூமுக்கு எதிரே உள்ள ஓம்டுர்மானின் டார் எஸ் சலாம் மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை (08) இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தலைநகரை கைப்பற்றுவதற்கு இராணுவம் மற்றும் பலம்மிக்க துணைப் படை ஒன்று கடந்த ஏப்ரல் தொடக்கம் சண்டையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நாட்டின் எதிர்காலம் பற்றி இராணுவத் தளபதி மற்றும் துணைப்படை தலைவர் இடையே ஏற்பட்ட மோதலே அங்கு தற்போது போராக வெடித்துள்ளது.

அந்த வான் தாக்குதலில் வீடுகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாக துணைப் படை வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பன்னிரண்டு வாரங்களாக நீடிக்கும் மோதலால் தலைநகரின் இயல்பு வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அங்கு கடைகள் மற்றும் சந்தைகள் அரிதாகவே திறக்கப்படுவதோடு கிட்டத்தட்ட அனைத்து மருத்துவ வசதிகளும் மூடப்பட்டுள்ளன. இந்த மோதல் தலைநகரைத் தாண்டி இன வன்முறை நீடிக்கும் மேற்கு டார்புர் பிராந்தியம் உட்பட பல இடங்களுக்கு பரவியுள்ளது. நாடு முழுவதும் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பதோடு கிட்டத்தட்ட மூன்று மில்லியன் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

போர் நிறுத்த முயற்சிகள் தோல்வி அடைந்த நிலையில் கிழக்கு ஆபிரிக்க பிராந்திய அமைப்பின் மத்தியஸ்தத்திலான அமைதிப் பேச்சு இன்று (10) எத்தியோப்பியாவில் நடைபெறவுள்ளது.

# புகலிடக் கொள்கையில் முரண்பாடு: நெதர்லாந்து அரசாங்கம் கவிழ்ந்தது

புகலிடக் கொள்கை தொடர்பில் ஆளும் கூட்டணி கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாட்டினால் நெதர்லாந்து அரசு கவிழ்ந்துள்ளது.

பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமர் மர்க் ருட்டே தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் நான்கு கட்சிகளிடையிலும் பிளவு ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து மன்னர் வில்லம் அலெக்சாண்டரை ஹேகில் கடந்த சனிக்கிழமை (08) சந்தித்த பிரதமர், புதிய தேர்தல் வரையான காலத்திற்கு காபந்து அரசுக்கு தலைமை வகிக்க ஒப்புக்கொண்டுள்ளார் எதிர்வரும் நவம்பர் நடுப்பகுதியில் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியேற்ற குடும்பங்கள் மீண்டும் ஒன்றிணைவதற்கான வாய்ப்பை கட்டுப்படுத்தும் பிரதமரின் பரிந்துரைக்கு கூட்டணி கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டதே பிளவுக்கு காரணமாகியுள்ளது.



நெதர்லாந்து அரசு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட நிலையில் குடியேற்றம் தொடர்பில் சில காலமாக அரசுக்குள் முறுகல் இருந்து வந்தது.

நெதர்லாந்தில் புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்கள் கடந்த ஆண்டு மூன்றில் ஒரு மடங்கு அதிகரித்து 47,000ஐ தாண்டி இருந்ததோடு இந்த ஆண்டில் சுமார் 70,000 விண்ணப்பங்கள் கிடைக்கு என்று எதிர்பார்ப்பதாக அரசின் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன.

இந்நிலையில் போர் அகதிகளின் உறவினர்கள் நெதர்லாந்துக்கு வருவதை மாதத்திற்கு 200 பேர் என கட்டுப்படுத்துவது உட்பட புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் முயற்சியில் பிரதமர் ருட்டே ஈடுபட்டிருந்தார்.

எனினும் அவரது கூட்டணி கட்சிகளான கிறிஸ்டியன் ஒன்றியம், குடும்ப ஆதரவு கட்சி மற்றும் சமூக விடுதலை டி66 கட்சிகள் இந்தத் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள.

நெதர்லாந்தில் நீண்ட காலம் பிரதமராக பதவி வகிப்பவர் என்ற சாதனைக்கு உரியவரான 56 வயது ருட்டே 2010 தொடக்கம் அந்தப் பதவியில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐந்தாவது தவணைக்கு பதவி வகிக்க தனக்கு சக்தி இருப்பதாக அவர் குறிப்பிட்டபோதும் தனது கட்சியுடன் ஆலோசனை பெற்ற பின்னரே இறுதி முடிவை அறிவிக்கவுள்ளார்.

நாட்டில் தீவிர வலதுசாரி கட்சிகளின் ஆதரவு அதிகரித்து வரும் நிலையில் புகலிடக் கோரிக்கையாளர்களை கட்டுப்படுத்துவதற்கான அழுத்தத்தை அவர் எதிர்கொண்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 10ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.